
# தொண்டன்

ஆரம்பம்: 1969 -பெப்ரவரி

ஆகஸ்ட்- 2007 சமய - சமூக - இலக்கிய வெளியீடு 20/=





இரத்தினபுரி மறைமாவட்டத்தின் புதிய ஆயர்

Rt. Rev. Dr. டொம் கிளேட்டஸ் சந்திர ஹீ பெரேரா



திருகோணமலை-மட்டக்களப்பு மறை மாவட்ட சமூகத் தொடர்பு தினம் - ஓகஸ்ட் - 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஆகஸ்ட் - 2007

மலர்-39 இதழ்-06

**ஆசிரியர்**

றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**

மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**

மெற்றில்டா இராஜேந்திரம்

பெஸ்லீயோ வாஸ்

ஸ்ரான்லி பிரபாகரன்

**வெளியீடு**

சமூகத் தொடர்பு நிலையம்.

திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்

அ.பெ.எண் - 44

மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE

P.O. BOX - 44

BATTICALOA.

TEL: 065 - 2226486

## உள்ளே



| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | - | 01 |
| தகவல் தொடர்பு ... | - | 02 |
| போர்க்களத்தில் என் செபம்... | - | 04 |
| இலக்கிய கலாநிதி.... | - | 05 |
| மாணவர் பக்கம் | - | 07 |
| மனக்கோலம் | - | 08 |
| இலக்கிய மஞ்சரி | - | 12 |
| மறை அறிவை வளர்ப்போம்... | - | 19 |
| தொண்டனின் சில நிமிடங்கள் | - | 15 |
| பூமி வெப்பமடைதலை.... | - | 18 |
| அரசியல்... அரசியல்... | - | 19 |
| அருட்தந்தை தமிழ்நேசன்.... | - | 22 |
| வேண்டும் வேண்டும் வேண்டும் | - | 23 |
| மருத்துவம்... மருத்துவம்... | - | 24 |
| விவிலியம் கற்போம் | - | 27 |
| அறிவை வளர்ப்போம் | - | 28 |

விலை : 20/=

ஆண்டு சந்தா : 350/=

(தபாற்செலவு உட்பட)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு.....

வெற்றிகள் நம்மைத் தேடி வருவதில்லை, பலவிதமான சவால்களை முறியடித்து பலநேர உழைப்பின் பின்னரே அதை நாம் அடையமுடியும்.

வெற்றியைச் சம்பாதித்துக்கொள்ள அயராமுயற்சி அவசியமாக இருக்கின்றது. நமது முயற்சியைத் தடைசெய்யவும், குறை கூறவும் நம்மைச் சூழ உள்ளவர்களும் ஏன் புறச்சூழலும் கூட முனைந்து நிற்கின்றது.

வெற்றியையே குறிக்கோளாகக் கொள்ளும் போது நமது வலிமையையும், நமது தற்பெருமைகளையும், இறுமாப்புகளையும் கூட இழக்கத்தான் வேண்டும்.

வெற்றியை இன்னொருவருக்கு எதிராக அல்லது இன்னொரு சக்திக்கெதிராக பெற முனையும் போது, நமது எதிராளி சம பலத்தோடு இருக்கின்றாரா என்பதையும் கருத்திற் கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் செத்த பாம்பை அடிப்பதைப் போலாகிவிடும்.

வெற்றிகளைப்பற்றி தம்பட்டம் அடிக்கும்போது அதற்குரிய கொள்கைகள் கடைப் பிடிக்கப்பட்டனவா என்பதை பரிசீலிக்க வேண்டியது அவசியமாகும். அல்லாவிடில் வெற்றி உரிய முறையில் பெறப்படவில்லை என்கின்ற உண்மை வெளிவரும்போது தலைக்குனிவாகவே அமையப் பெறும்.

இயேசுவின் (மீட்பு) வெற்றியானது உலக அரசுகள் எதுவும் காணாத வெற்றியாகவே இன்றும் போற்றப்படுகிறது. ஏனெனில் அவமானத்தின் சின்னமாகிய சிலுவையையே தனது ஆயுதமாகக் கொண்டிருந்தார்.

இயேசுவின் வெற்றியில் சுயநலம் இருக்கவில்லை; மற்றவரை அடக்கி ஒடுக்கி ஆளவேண்டும் என்ற எண்ணம் இருக்கவில்லை; அதே வேளையில் கொல்லவேண்டும், அழிக்கவேண்டும் என்ற மமதையும் இருக்கவில்லை. மாறாக சிலுவையில் தன்னுயிரை ஒப்புக்கொடுக்கும் போது கூட "தந்தாய் இவர்கள் அறியாமல் செய்கின்றார்கள் இவர்களை மன்னியும்" என்று இரந்து வேண்டினார்.

இயேசுவின் வெற்றியில் மனிதன் மீட்புப்பெறவேண்டும் என்ற நிலைப்பாடே இருந்தது. இரக்கம், அன்பு, மன்னிப்பு இவையே அவரது கொள்கைப்பாடாக இருந்தன. "மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்" என்பதே அவரது போதனையாக இருந்தது. ஏழைகள், கைவிடப் பட்டவர்கள், அனாதைகள் உரிமை மறுக்கப்படுபவர்களுக்காகவே அவர் குரல் கொடுத்தார். இதைப் பொறுக்கமுடியாத தீயசக்தியே அவரை எதிர்த்து நின்றது. சிலுவை மரணத் தீர்ப்பை அளித்தது. ஆனால் அவர்களும் மனம்மாறி அவர்வழி திரும்ப அவரது உயிர்ப்பின் வெற்றி வழிசமைத்தது.

உலக மாந்தர் அனைவரும் மீட்புப்பெற இயேசு சாத்தானை, தீமையை ஒடுக்கி வெற்றி கண்டார். இன்று அவர் பிள்ளைகள் நாம் இயேசுவின் வெற்றியையே கொண்டாடு கின்றோம். இருப்பினும் உயிர்த்த இயேசுவின் உயிர்ப்பின் செயற்பாடுகள் நம்மிடத்திலே பெருகவேண்டும். இயேசுவின் வழியிலே போராடி நமது சாதாரண நாளாந்த வாழ்வில் வெற்றிவாகை சூடுவோம்.

மறுமடலிலும் கலக்க ஆசைகளுடன்.... - ஆசிரியர் -



## இறைவாக்கு


"இறையாட்சியைச் சிறு பிள்ளையைப்போல் ஏற்றுக்கொள்ளாதோர் அதற்கு உட்படமாட்டார் என நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்"

(லூக்கா 18:17)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் தொடர்புசாதனங்களின் பணிகள்



திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத்தொடர்புதினம் ஆகஸ்ட் 5ம் திகதியாகும். அதனை யொட்டி இச்சிறப்புக்கட்டுரை வெளியிடப் படுகின்றது.

தகவல் தொடர்புச் சாதனங்களை அதிகளவு பயன்படுத்தும் நாடே நாகரிக நாடு என்று பெயர் பெறும்; அறிவு வளர்ந்த நாடு எனப்படும்.

மரபுவழியில் வந்த தெருக்கூத்து, பொம்ம லாட்டம், வில்லுப்பாட்டு, தெருநாடகங்கள் என்ப னவும், அச்சுச்சாதனங்களான பத்திரிகைகள், சஞ்சி கைகள், கையேடுகள், சுவரொட்டிகள், விளம்பரப் பலகைகள் ஆகியனவும், இலத்திரனியல் ஊட கங்களான வானொலி, தொலைக்காட்சி, திரைப் படம், கணினி வலையமைப்பு என்பனவும் தகவல் தொடர்புசாதனங்கள் என்ற வரையறைக்குள் அடங்குபவனவாகும்.

இவற்றின் பணிகள் சிறப்பு வாய்ந்தன. சுதந்திரமாகச் செய்திகளை வெளியிடும் தன்மை உள்ளவரை மட்டும்தான் இவற்றின் பணிகள் உண்மைத் தன்மையுடையனவாக இருக்கும். அறிவித்தல், அறிவுறுத்துதல், பொழுதுபோக்கு, வர்த்தகம், காவல்செய்தல், புலனாய்வு செய்தல் என்பன தகவல் தொடர்புசாதனங்களின் சில பணிகள் ஆகும்.

**அறிவித்தல்.**

தகவல்களினை மக்களுக்கு அறிவிக்கும் பணியை தொடர்புசாதனங்கள் செய்கின்றன. தகவல்களினை விரைவாகவும், விளக்கமாகவும், துல்லியமாகவும் விருப்பு வெறுப்பின்றி மக்களைச் சென்றடையவைக்கும் பணியே இதுவாகும். தகவல்கள் சரியான நேரத்தில் வேண்டியவர்கட்கு சென்றடைய வேண்டும். அதுவும் சரியாகச் சென்றடைய வேண்டும்.

1945ம் ஆண்டு உலகப்போரின் இறுதித் தறுவாயில் நேசநாடுகள் ஜப்பான் நாட்டிற்கு வானொலிமூலம் எச்சரிக்கைச் செய்தியனுப்பின. அதற்குக் கால அவகாசம் வேண்டும் என்று ஜப்பான் பதிலளிக்க விரும்பியது. ஆனால் கவலை யீனம் காரணமாக 'எச்சரிக்கையைக் கண்டு பயப் படமாட்டோம்' என்று பதில் திரிபடைந்து சென்று விட்டது. இத்தவறினால் கிரோசிமா, நாகசாகி என்பன நாசமாயின.

**அறிவுறுத்தல்**

அறிவுறுத்துவது என்பது மக்களுக்கு விழிப்பூட்டுவது; கல்வியூட்டுவது என்றெல்லாம் பொருள்படலாம்.


சில ஆண்டுகட்குமுன் நம்நாட்டில் கடற் பேரலை கோரத் தாண்டவமாடியது; பெருத்த அழிவு ஏற்பட்டது. ஏனெனில் அதனைப்பற்றி நமக்கு முன்பின் அறிவேதும் இருக்கவில்லை. ஆனால் தற்போது அது தொடர்பாக ஓரளவு அறிவு றுத்தல்களை ஊடகங்களூடாக நாம் பெற்றுள்ளோம். இனிமேல் இவ்வாறான அழிவுகளில் இருந்து ஓரள வேனும் தப்பிப் பிழைக்க எம்மவர்களால் முடியும்.

**பொழுதுபோக்கு**

வீட்டில் இருந்து கொண்டே பயனுள்ள முறையில் பொழுதைப்போக்க தொடர்பூடகங்கள் உதவுகின்றன. சிறுவர்கள், பெரியவர்கள், ஆண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கள், பெண்கள் என்றவாறும் வயதிற்கேற்றவாறும் பொழுதுபோக்கு அம்சங்களை சாதனங்கள் வழங்குகின்றன. பத்திரிகைகளைப் பொறுத்தவரை கருத்துப்படங்கள் கூடிய விளக்கத்தைத் தருகின்றன. ஒரு கட்டுரை சொல்லுகின்ற விடயத்தை கருத்துப்படம் தந்துவிடும். (நகைச்சுவையுடன்).

**வர்த்தகம்**

தகவல் தொடர்புசாதனங்கள் விளம்பரங்களை பெருமளவில் வெளியிடுகின்றன. இதனால் கிடைக்கும் விளம்பரக் கட்டண வருவாய் மூலம் சம்பந்தப்பட்ட தொடர்புசாதன நிறுவனம் தனது சொந்தக்காலில் நிற்க முடிகின்றது. அத்துடன் விளம்பரதாரர்கட்கும் வியாபாரம் சிறக்கின்றது. தற்காலத்தில் செய்தியறிக்கைகளின் 20 விழுக்காடு நேரத்தையும் விளம்பரங்கள் வழங்கி விடுகின்றன. விளம்பரம், வருமானம் இல்லாவிடில் பத்திரிகைகளின் விலைகள் இன்னும் உயர வாய்ப்புண்டு.

**காவல்காரன்**

ஒரு நாட்டின், மக்களின் உரிமைகளின் பாதுகாவலனாக இருக்கவேண்டிய பெரும் பொறுப்பை சமூகத் தொடர்பு சாதனங்கள் கொண்டுள்ளன. மார்க்கு வி. சைலட்ஸ் என்பவர் பின்வருமாறு கூறியுள்ளார், 'உரிமைகளையும் மக்களாட்சியையும் பேணிக்காப்பது இதழ்களின் பணி'.

பாராளுமன்றம், நீதித்துறை, நிர்வாகத்துறை என்பன குடியாட்சியைச் சுமக்கும் மூன்று தூண்கள் எனக் கூறுவர். ஆனால் எட்மண்பேர்க் என்பவர் அச்சூடகத்தை நான்காவது தூண் என்று வர்ணிக்கின்றார்.

**புலனாய்வு செய்தல்**

துப்பறிந்து செய்திகளை வெளியிடுவது புலனாய்வுப்பணி எனப்படும். பேர்ப்வாட், கார்ள் பெர்ன்டின் என்ற இரு இளம் பத்திரிகையாளர்கள் 'வாட்டர்கேட்' ஊழலைக் கண்டுபிடித்து 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகையில் வெளியிட்டனர். அதன் காரணமாக அமெரிக்க ஜனாதிபதி பதவி விலக நேரிட்டது. இலங்கையில் எம்.ரி.வி நிறுவனத்தினர் 'விளம்பரத்தட்டி' சேதப்படுத்தியவர்களைப் பின்தொடர்ந்து சிலரை இனம் காண உதவினர். இதுவும் புலனாய்வுப்பணியைச் சார்ந்ததே.



இவற்றைத்தவிர கூர்ந்து ஆராய்தல், இணைத்துக் காட்டுதல், சமுதாயச்சார்புடைய வராக்குதல், நாகரீகத்தின் அச்சாணி, தகுதியளித்தல் போன்றனவும் சமூகத்தொடர்புசாதனங்களின் பணிகளில் சிலவாகும்.

**- வாஸ் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்களத்தில் என் செபம் கேட்டு....IV

மலைகள் நோக்கிபடை எடுப்போம்
பரமன் புகழ் பாடி நடப்போம்
வல்லவர் கரம் பற்றித் தொழுவோம்
மன்னவர் யாவே எனக்காய் வீற்றிருக்கிறார்.

I
சீனாய் மலையுச்சியில் ஆண்டவர் இறங்கி வந்தார்
பற்றியெரியும் நெருப்புப்போன்று
மாட்சியின் காட்சியது
மோசேயை அழைத்தங்கே தேவகட்டளை
அருளினாரவர் - நாமும்
தேவகிரீடம் பெற்றிடவே அமைந்து நடப்போமே.

II
விருப்பமான சீயோன் மலைதனை
தேர்ந்து கொண்டாரவர்
உயர்ந்ததாய் நிலைத்திருக்கும்
ஆண்டவன் கோயில் மலையது
வழிபடுவீர்கள் இம்மலை நோக்கியென்பது
மோசேயிட்ட கட்டளை - நாமும்
ஏறெடுப்போமே கரம் கூப்பி இறைபிரசன்னம்
காண்போமே.

III
மீட்பர்யேசு மலைகள்
நோக்கிச்சென்று வேண்டினார்
கருக்கலோடெழுந்து மலைமீதினிலே
இறைவேண்டுதல் செய்தார்
கிடைத்ததுவோ சிலுவை மரம் சுமந்துசென்றிடவே
கரடுமுரடு மலையடிவாரம்
கொல்கொத்தா மலைதானே, இரட்சணியத்தின்
சிலுவைமரம் அமைந்த தளம்.

● சா(ஜ)ஹான்



IV
சங்கமண் கிராம தாண்டியடி
சிலுவைமலை அதெமதுமலை
இயேசுபிரான் சிலுவைப்பாடம்
கற்றுத்தரும் அழகுமலை
திருக்கோவில் வாழ் பங்குமக்கள்
விசுவாசம் வளர்க்கும் மலை
பக்தர் கூட்டம் படையெடுக்கும்
தவக்கால தியானமலை

V
தியாகம் செய்வோம் வலியேற்போம்
நடந்து செல்வோம் மலைநோக்கி
தியானம் செய்வோம் பாடம் கற்போம்
நற்செய்தி புகட்டுவோம் மலைமீது
முனைந்து நிற்போம் முயற்சியெடுப்போம்
கட்டியெழுப்புவோம் மலைதனை
புகழ்பரப்புவோம் தாண்டியடி மலைதனிலே
கிடைத்த பெரும் புதுமைகள் பரப்புவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய கலாநிதி க.தா.செல்வராசகோபால் அவர்களின் மட்டக்களப்பு மாநிலத்தின் பண்டைய வரலாற்று அடிச்சுவடுகள்

அங்குமிங்குமாகச் சிதறிக்கிடக்கும் வரலாற்றுத் தகவல்களை ஒன்று திரட்டி, அவற்றை வாசகர் முன் படைக்கும் ஒரு பாரிய முயற்சியாக, மேற்படி நூல் வெளிவந்துள்ளது. மட்டக்களப்பு வரலாறு பற்றி இதுவரை கட்டுரைகள், நூல்கள் எழுதியவர்களுள் செல்வி. க. தங்கேஸ்வரி ஒருவரே அதற்கான தகைமை பெற்றவர்.

இவர் களனிப் பல்கலைக் கழகத்தின் தொல்லியல் சிறப்புப் பட்டதாரி. ஏனையோர் தமிழறிஞர்களே அன்றி வரலாற்று ஆசிரியர்கள் அல்லர். பண்டிதர் மகாவித்துவான் வி.சி.கந்தையா (மட்டக்களப்புத் தமிழகம்), மகாவித்துவான் FXC. நடராசா (மட்டக்களப்பு மான்மியம்), எஸ்.ஓ.கனகரத்தின (Monography of Batticaloa), வித்துவான் கமலநாதன் + திருமதி.கமலநாதன் (மட்டக்களப்பின் பூர்வீக சரித்திரம் - மட்டக்களப்பு மான்மிய ஆராய்ச்சி), திருமதி.........(மட்/ மான்மிய ஆராய்ச்சி), திரு. சிவசண்முகம் போடியார் (மட் முக்குவர் வரலாறு) ஆகியோர் இதுவரை மட்டக்களப்பு வரலாறு தொடர்பான நூல்களை எழுதியுள்ளனர்.

மேலே குறிப்பிட்ட நூல்களுள், 'மட்டக்களப்பு மான்மியம்' நூலில் இடம்பெறும் வரலாற்றுத் தகவல்களின் நம்பகத்தன்மை இன்று சர்ச்சைக்குரியதாகிவிட்டது. எனவே அதுபற்றிய ஆய்வு நூல்களும் சர்ச்சைகளுக்குரியதாகி விட்டன. இந் நூலில் பின்வரும் அத்தியாயங்கள் இடம்பெறுகின்றன. மட்டக்களப்பு மாநிலம், பண்டைய வரலாறு, இட ஆதாரம், சான்றாதார வரலாறு, மகாவம்சம், மூவிராச்சியம் வட-கீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்று, மட்டக்களப்பு



மான்மியம் இடப்பெயர், அநுபந்தம்.

ஒவ்வொரு அத்தியாயத்திலும் மட்டக்களப்பு வரலாற்றுச் சான்றாதாரங்கள் கூறப்படுகின்றன. அநுபந்தம் என்ற பகுதியில் பின்வரும் நூல்களின் சுருக்கக் குறிப்புகள் தெரிவிக்கப்படுகின்றன. 'யார் இந்த வேடர்' (க.தா. செல்வராசகோபால்), 'இலங்கையை அரசு செய்த ஆட்சியாளர் பெயர் வரிசை', 'இராஜாவலிய', 'தம்பபண்ணையிலிருந்து புலம் பெயர்ந்த பூர்வீக மக்கள்', 'மட்டக்களப்பை அரசு செய்தவர்களின் பெயரட்டவணை', 'மட்டக்களப்புத் தமிழகம்' (வி.சீ. கந்தையா).

இவற்றுள் 'மட்டக்களப்புத் தமிழகம்' சமகால வரலாற்றையும், சமூக வரலாற்றையும் கூறும் நூல், மட்டக்களப்புப் பற்றிய உசாத் துணை நூலாகக் கொள்ளத் தக்கது. இதில் பூர்வீக வரலாறு எதுவுமில்லை.

இதில் முக்கியம் என்னவென்றால், அனுபந்தம் பகுதியில் வெறுமனே நூல்களின் பெயர்களை மட்டும் குறிப்பிடாமல் நூல்களின் முக்கிய கருத்துக்களையும் குறிப்பிட்டிருப்பதுதான். இதன் மூலம் வாசகரே இந்நூல்களின் கருத்துகள் பற்றி ஒரு தெளிவைப் பெற முடியும் அல்லவா? நூலாசிரியர் தனது நீண்ட "படைப்பாசிரியர் உரை"யில் சில முக்கியமான கருத்துக்களைத் தெரிவிக்கிறார். இலங்கையில் ஆட்சி செய்த இராவணன் காலத்து மக்கள் இலங்கையில் தொடர்ந்து வாழ்ந்து வந்துள்ளனர். இவர்களை மகாவம்சம் இயக்கர், நாகர் எனக் குறிப்பிடுகிறது. விஜயன் கி.மு.543ல் இலங்கை வந்தபோது இம் மக்கள் இலங்கையில் வாழ்ந்துள்ளனர்.

மட்டக்களப்பைப் பொறுத்தவரை இதன் பூர்வ குடியினர் வேடர்கள். இவர்கள் விந்தனையிலும் தம்பானையிலும் வாழ்ந்தனர். இவர்களைப் போன்றே புலிந்தரும், திமிலரும், கழுவந்தரும், முக்குவரும் பண்டை மட்டக்களப்பில் குடிகளாக வாழ்ந்தனர். இவற்றுக்கு ஆதாரமாக R.L. Spittel வேடர்களைப் பற்றிய பல நூல்களையும் (ஆங்கிலத்தில்) ஆதாரமாகக் காட்டுகிறார். அதுமட்டுமல்ல, அவரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டன் சேர்ந்து பலவேடர் குடியிருப்புகளுக்கு நேரில் சென்று சேகரித்த தகவல்களையும் கூறுகின்றார்.

மேற்படி தகவல்கள் அவர் எழுதிய "யார் இந்த வேடர்" என்ற நூலிலும் இடம்பெறுகின்றன. மட்டக்களப்பின் பண்டைக்காலக் குடிகளில் இன்னும் நிலைத்திருப்பவர் "முக்கியர்" (முக்குவர்) என்போரே. இவர்கள் தம்மைக் கலிங்க நாட்டவர் எனக்கூறிக் கொண்டாலும் இவர்களின் வழக்காறுகள் இவர்களது பூர்வீகத்தை எடுத்துக்காட்டுகின்றன. இது முடிந்த முடிபல்ல என்றும் வாசகரின் மாற்றுக் கருத்துக்கு இடமுண்டென்றும் அவர் தெரிவிக்கிறார். 'கலங்கித் தெளிதல்' என்னும் நியதிபோல, மட்டக்களப்பின் வரலாற்றில் அடிப்பதிந்து கிடக்கும் பல உண்மைகளைக் கலக்கித் தெளிவதற்கு இடும் கலக்குக் கோலாக இந்த நூலில் உள்ள தகவல்கள், அதுபற்றிய ஆய்வுரைகள், மதிப்பீடுகள், முடிவுகள் என்பன தொழிற்படவேண்டுமென்பதும் எங்களின் மனமார்ந்த ஆசையும், ஆவலும், ஆதங்கமுமாகும் என நூலாசிரியர் கூறுகிறார்.

இந்நூலின் இணையாசிரியர் எஸ்.பி.கனகசபாபதி (கல்கிதாசன்) அவர்களும் ஒரு நீண்ட முன்னுரையை எழுதி உள்ளார். பத்துப் பக்கங்கள் கொண்ட இம் முன்னுரையும் ஓர் ஆய்வுக் கட்டுரையாகவே அமைகிறது. 294 பக்கங்கள் கொண்ட இந்நூல் முதலாம் பாகம் எனவும், இதன் இரண்டாம் பாகம் வெளிவரவுள்ளது என்பதையும் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். அதிலும் பல முக்கியமான ஆய்வு நூல்களின் விபரம் இடம் பெறுகிறது என்பதிலும் அறிய முடிகிறது.

சுருங்கக் கூறின் மகாவம்சம், மட்.மான்மியம் என்பன முழுமையான வரலாற்று நூல்கள் அல்லவென்றும், வேறு பல ஆய்வுத் தகவல்களைக் கொண்டு மட்டக்களப்பின் வரலாறு எழுதப்படவேண்டும் என்பதில் நூலாசிரியர் முனைப்பாக இருக்கிறார் என்பதையும் இந்நூல் மூலம் அறிய முடிகிறது.

- அன்புமணி -

## தாழ்ச்சியின் உயர்ச்சி

சக்தி SUPER STAR

வாழ்க,

***சக்தியின் கலைகுன் சசிகரனே!***

***வாழ்க உன் தாழ்ச்சியின் உயர்ச்சி.***

**"தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ அவன் நிச்சயமாய் உயர்த்தப்படுவான்"**


இவ்வார்த்தைகள் எம் ஆண்டவர் இயேசு எமக்கருளிய அன்பின் வார்த்தைகள். தன்னைத் தாழ்த்தியதால் உயர்வடைந்திருக்கும் ஒரு கலைஞனை இன்று நாம் இனம் கண்டுள்ளோம். அவர் வேறுயாருமல்ல. இன்றைய இளம் பாடகர் ***Shakthi Super Star. N.*** சசிகரன் அவர்கள்.

தானும் தன் குடும்பமும் தன்வேலையுமென்று வாழ்ந்தவர், இன்று நாடு பூராகவும் போற்றும் ஒரு மகுடத்தை தனது தலையிலே தாங்கியுள்ளார். தலைநகரமே தெரியாதாம், அதிலே பஸ் rout க்களும் தெரியாதாம். அதனால் அவர் ஒதுங்கி விட்டாரா? இல்லை! இல்லை!! தனது குறிக்கோளை அடையப் புறப்பட்டார்; கடவுள் அவரைக் கைவிடவில்லை. ஏன்? அவருடைய உள்ளத்திலே நிறைவான தாழ்ச்சி இருந்தது. அவர் பேசும் ஒவ்வொரு சொல்லிலும் பணிவு இருந்தது. அவர் தினக்குரல் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூட பணிவு உயர்வு தரும் என்று சொல்லியிருந்தார். அவரிடம் இருந்த அந்தப் பணிவுதான் அவரை உலகளவிலேயே மிளிரச் செய்து விட்டது. தொலைக்காட்சியிலே ஒரு நிகழ்ச்சியின் போது அவர், தனக்கு பாடக்கூடிய குரலைத் தந்த ஆண்டவருக்கு நன்றி கூறினார். உண்மையிலேயே அவரை ஒரு பாடகனாக மட்டும் நாம் காணவில்லை. நல்ல பண்புள்ள, உள்ளத்திலே தாழ்ச்சியுள்ள, இறைபக்தியுள்ள ஒரு கலைஞனை நாம் காண்கிறோம். அது மட்டுமல்ல அவரிடம் உள்ள இந்த நல்ல பண்புகள் இத்துடன் மறைந்து விடக்கூடாது. அவை எப்போதுமே அவரிடத்திலே நிலைத்து நின்று இன்னும் பல உயர்வுகளை அவருக்கு அள்ளி வழங்க வேண்டும் என்று எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறோம். மீண்டும் சக்தி ***SUPER STAR N.*** சசிகரன் அவர்களை மனமார வாழ்த்துவதுடன் இலைமறை காயாக இருந்த இக்கலைஞனை பார் புகழ வழிவகுத்த சக்தி நிறுவனப் பணியாளர் அனைவருக்கும், சசிகரனின் பெற்றோர் மனைவி, மகள், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் நவில்கின்றோம்.

- மதுஷாலி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஜெருசலேம் பொதுச்சங்கம், கூடியதற்கான காரணமும் எடுக்கப்பட்ட முடிவுகளும்

ஜெருசலேம் பொதுச்சங்கமானது விருத்த சேதனம் பற்றிய ஒரு பிரச்சினையினைத் தீர்ப்பதற் காகவே கூட்டப்பட்டது. இங்கு யூதேயாவில் இருந்து வந்த சிலர், புதிதாகத் திருச்சபையில் சேர்ந்து கொண்ட அனைவரும் மோசேயின் சட்டப்படி விருத்தசேதனம் செய்துகொள்ள வேண்டும் எனப் போதித்து வந்தார்கள். இதனால் பவுல், பர்னபா ஆகியோருக்கும் இவர்களுக்குமிடையே வாக்கு வாதம் ஏற்பட்டது. இதனால், இப்பிரச்சினையி னைத் தீர்த்து வைக்கும் பொருட்டு பவுலும், பர்ன பாவும், அவர்களுள் சிலரும் ஜெருசலேமுக்குச் சென்று திருத்தூதர்களிடமும் மூப்பர்களிடமும் இச்சிக்கலைத் தீர்ப்பதற்கு அனுப்பிவைக்கப் பட்டனர். இவர்கள் ஜெருசலேம் வந்தபோது திருத் தூதர்களும், மூப்பர்களும் மிகவும் மகிழ்ச்சிய டைந்தனர். கடவுள் தங்கள் வழியாய்ச் செய்த அனைத்தையும் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால், பரிசேயக்கட்சியினருள் ஆண்டவரில் நம்பிக்கை கொண்ட சிலர் இதனை ஏற்றுக் கொள் ளவில்லை. அவர்களும் மோசேயின் சட்டப்படி விருத்தசேதனம் கட்டாயம் பெறவேண்டும் என வாதிட்டனர். இப்பிரச்சினையினை ஆராய்ந்து பார்க்கத் திருத்தூதர்களும், மூப்பர்களும் நீண்ட நேரம் விவாதித்த பின்பு பேதுரு எழுந்து இதற்கான தீர்வினைக் கூறத் தொடங்கினார். இதன்படி யார் யார் இயேசுவை விசுவசித்து ஏற்றுக்கொள்கிறார் களோ, அவர்களுக்கு மீட்பு உண்டு. இறைவனை விசுவசித்து ஏற்றுக் கொள்வதே அவர்களின் முக்கிய கருத்தாக இருந்தது. (தி.ப. 15:8-12) உள்ளங்களை அறியும் கடவுள் நமக்குத் தூய ஆவியைக் கொடுத்தது போல அவர்களுக்கும் கொடுத்து அவர்களையும் ஏற்றுக் கொண்டார். நம்பிக்கையால் அவர்களின் உள்ளங்களைத் தூய்மைப்படுத்தியுள்ளார். கடவுள் நமக்கும் அவர்களுக்குமிடையே எந்த வேறுபாடும் காட்ட வில்லை. எனவே, நம் மூதாதையரோ, நாமோ சுமக்க முடியாத சுமையை இவர்கள் மேல் சுமத்த லாகாது எனக்கூறியதும் அங்கு திரண்டிருந்தோர் யாவரும் அமைதியாயினர்.

இதன் பிரகாரம் இன்றியமையாதவை தவிர எச்சுமையும் இவர்கள்மேல் சுமத்தப் படலாகாது. பொய்த்தேவர்களையும், சிலை வழிபா ட்டையும் தவிர்க்க வேண்டும். யூதேயச் சட்டத் தின்படி அசுத்தம் எனக்கருதப்படும் இரத்தம் சிந்திய, கழுத்து நெரிக்கப்பட்ட, மூச்சடைத்துச் செத்த எந்த மாமிசத்தையும் உண்ணலாகாது, யூதர்களின் முறைதகாத திருமணங்களையும் தவிர்த்தல் வேண்டும் (பரத்தமை) எனத் தீர்மா னிக்கப்பட்டது. இத்தீர்மானங்கள் பழைய ஏற் பாட்டில் லேவியர் புத்தகம் 17ம், 18ம் அதிகாரங் களில் காணக்கூடிய சட்டதிட்டங்களை அடிப் படையாய்க் கொண்டமைந்ததாகும்.

எனவே, இத்தீர்மானங்களை எழுத்து வடிவில் ஒரு கடிதத்தில் எழுதி அதனை யூதா, சீலா ஆகியோரின் கையில் கொடுத்து பவுல், பர்னபா ஆகியோருடன் அனுப்பி வைத்தார்கள் திருத்தூதர்களும், மூப்பர்களும். இதனைப் பெற்றுக் கொண்ட புறஇனத்தவர்கள் இன்னும் அதிகமாய் மகிழ்ச்சியடைந்தனர். இவ்வாறு இச்சங்கமானது பேதுருவின் தலைமையில், விருத்தசேதனம் குறித்த காரணத்தை முன்னிட்டு, ஜெருசலேமில் கூட்டப்பட்டதால், "ஜெருசலேம் பொதுச்சங்கம்" எனப் பெயர்பெற்றது. இதுவே திருச்சபையில் கூட்டப்பட்ட முதல் பொதுச் சங்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனக்கோலம்

*R.* ஸ்ரான்லி பிரபாகரன்

பிரபஞ்சம் பற்றிய ஆய்வு புவியின் எல்லைகளையும் தாண்டி, கோள்கள் வரை செல்கின்றது. அதேபோல சமுத்திரத்தின் ஆழத்தையும் ஆய்வு செய்கின்றது. மனித மனதைப்பற்றிய ஆய்வும் ஆழமாகவும், அகலமாகவும் செல்கின்றது. இந்த ஆய்வுகள், கண்டுபிடிப்புக்கள் என்பனவற்றையெல்லாம் வாசித்துப் படிக்கின்றபோது "மனதின் கோலம் ஒரு விந்தைதான்" என்ற எண்ணம் மனதில் படிகின்றது.

மனக்கோலத்தில் இம்முறை மனதின் விந்தையான ஒரு கோலம் பிரசுரமாகுகின்றது. டாக்டர் அ. அல்போன்ஸ் அவர்கள் எழுதிய "கனவுகள், கற்பனைகள், காவியங்கள் (Dream Analysis)" என்னும் நூலில் இருந்து "கனவுகள் (Dreams)" என்னும் ஓர் அத்தியாயம் கனவுகள் பற்றிய பல தகவல்களைத் தருகின்றது. இப்பகுதியே இம்முறை வெளியாகுகின்றது.

இக்கட்டுரையை வாசிக்கின்றபோது மனிதனைப்பற்றிய அறிவு அகலிப்பதோடு, மனிதனை விளங்கிக் கொள்கின்ற முறையும் விரிவடையும் என நம்புகின்றேன். அதேவேளை, மனித மனத்தின் செயற்பாடுகளில் இன்னுமொரு விடயத்தையும் இது காட்டி பிரமிப்பூட்டுவதாயும் அமைகின்றது.

"பிரபஞ்சத்தின் மையத்திற்கு இட்டுச் செல்கின்ற
மறைந்த வழியே கனவாகும்."

## கனவுகள் (Dreams)

கனவுகள் மனிதனைப் "பிரபஞ்சத்தின் மையத்திற்கு இட்டுச் செல்கின்ற மறைந்த வழி...." "கனவு ஓர் இரகசியக் கடிதம்".

தூங்குகின்ற மனிதனுக்கு விருந்தளிக்கும் கோர்வையான காட்சிகள், சித்திரங்கள், அல்லது நிகழ்ச்சிகளைக் கனவு என ஆக்ஸ்ஃபோர்டு அகராதி (Oxford Dictionary) வரையறுக்கின்றது.

"தூங்குகின்ற மனிதனின் மனதினுள் கடந்து செல்லும் உணர்ச்சிகள், உருவங்கள் சிந்தனைகளின் தொடர்வரிசையே கனவு" என வெப்ஸ்டரின் 'நியூ வேர்ல்ட் சொல் அகராதி' (New World Dictionary) விவரிக்கின்றது.

பொதுவாக "உருவங்களை வெளிப்படுத்துவதும் சில நேரங்களில் பொதுவானதும், பொதுவான தல்லாததுமான உறவை வெளிப்படுத்தும் ஒலிகளே கனவுகள்".

"கனவு ஆழ்மனதைப் பிரதிபலிப்பதும், வாழ்வை முழுமையாக அர்த்தமுள்ளதாக உணர்ந்து வாழ்வதற்கும் ஏற்ற ஓர் அழைப்பு".

கனவு காணும் போது நாம் நாடக மேடையில் இருக்கின்றோம். ஏனென்றால் ஒரு நாடகம் அல்லது கதையைப் போல கனவுக்கும் முதல், இடை, கடை என மூன்று பகுதிகள் இருக்கின்றன. கனவின் முதற்பகுதி கதாபாத்திரத்தினுடைய சூழ்நிலையை எடுத்துக் காட்டுகின்றது. மேலும் கனவு காண்பவரின் பிரசன்னம் அங்கு இருக்கின்றது. இடைப்பகுதி சிறிது குழப்பமான, சிக்கலான பகுதி. இந்நிலையில் முதற்பகுதிக்கும், இடைப்பகுதிக்குமிடையே சில முரண்பாடுகள் ஏற்படுகின்றன. கடைப்பகுதியில் இந்த முரண்பாடுகள் அல்லது சிக்கல்கள் ஒரு சுமூகமான முடிவுக்கு வருகின்றன. குழப்பங்கள் முழுமையாக அகன்று போகின்றன.

எண்ணங்களே கனவுகள். கனவு காணுதல் என்றால் சிந்தனை செய்தல் என்றும் பொருள்படும். கனவு ஒரு மொழி. இந்த மொழி அடையாளங்களால் உருப்பெறுவதன் மூலம் இம்மொழியின் அர்த்தங்களை நாம் புரிந்தும் கொள்ளலாம். கனவாகிய மொழியைப் புரிந்து கொள்வதற்கு அடையாளங்களைப் பற்றியத் தெளிவான அறிவு இன்றியமையாதது.

சிந்தனைகள் காட்சிகள் வடிவில் தோற்றமளிக்கின்றன. இவ்வாறு காட்சிகளின் வடிவில் தோற்றமளிக்கும் சிந்தனைகளே கனவுகள். கனவின் மொழி, கண்ணால் பார்க்கக் கூடிய ஒன்று. சிந்தனைகளே உருவங்கள் வடிவில் மாற்றம் பெறுகின்றன. ஆனால் அவைகள் சிந்தனைகளின் எளிமையான வடிவம் அல்ல. மாறாக, மனதின் மிகக் குழப்பமான, சிக்கலான செயல்பாடுகளால் கட்டி எழுப்பப் படுகின்ற ஓர் அரிய காட்சி.


கனவுகள் மனிதனுடைய வழியைச் செம்மைப்படுத்துகின்றன; நெறிப்படுத்துகின்றன; நன்னெறியைப் போதிக்கின்றன. கனவில் பதட்டமோ, குற்றவுணர்வோ இருப்பதில்லை. நமது மனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுத்திகதி
30-08-2007

# சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 11



1. எருசலேமில் சீடர்கள் தங்கி எதற்காகக் காத்திருக்குமாறு இயேசு கூறினார்?

விடை:- ..........................................................................................

2. சீடர்கள் மறைநூலை எப்படிப்புரிந்து கொண்டனர்?

விடை:- ..........................................................................................

3. இடைவெளிகளை நிரப்பவும்.

"...................................... துன்புற்று ......................................

...................................... உயிர்த்தெழ ......................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயேசு விண்ணகஞ் செல்லுதல்

லூக்கா: 24:44-51

அவர் அவர்களைப்பார்த்து, "மோசேயின் சட்டத்திலும் இறைவாக்கினர் நூல்களிலும், திருப்பாடல்களிலும் என்னைப்பற்றி எழுதப்பட்டுள்ள அனைத்தும் நிறைவேறவேண்டும் என்று நான் உங்களோடு இருந்தபோதே உங்களுக்குச் சொல்லியிருந்தேன்" என்றார்; அப்போது மறைநூலைப் புரிந்து கொள்ளுமாறு அவர்களுடைய மனக்கண்களைத் திறந்தார். அவர் அவர்களிடம் "மெசியா துன்புற்று இறந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழவேண்டும் என்றும், 'பாவமன்னிப்புப் பெற மனம் மாறுங்கள்' என எருசலேம் தொடங்கி அனைத்து நாடுகளிலும் அவருடைய பெயரால் பறைசாற்றப்பட வேண்டும் என்றும் எழுதியுள்ளது. இவற்றுக்கு நீங்கள் சாட்சிகள், இதோ, என்தந்தை வாக்களித்த வல்லமையை நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்கள் உன்னதத்திலிருந்து வரும் அவ்வல்லமையால் ஆட்கொள்ளப்படும் வரை இந்நகரத்திலேயே இருங்கள்" என்றார். பின்பு இயேசு பெத்தானியா வரை அவர்களை அழைத்துச் சென்று தம் கைகளை உயர்த்தி அவர்களுக்கு ஆசி வழங்கினார். அவர்களுக்கு ஆசி வழங்கிக் கொண்டிருந்தபோதே அவர் அவர்களிடமிருந்து பிரிந்து விண்ணேற்றம் அடைந்தார்.

அனுப்புநர்:-

பெயர் : ......................................................

முகவரி : ......................................................

......................................................

......................................................

சேரல்:- *வர்ணம் தீட்டும் போட்டி* - இல 10

தொண்டன்

அ.பெ. எண் - 44

மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலுக் கட்டாயமாகத் தடை செய்யும் காரியங்களை நாம் கனவில் பயமோ, பதட்டமோ, குற்றவுணர்வோ இல்லாமல் வெளிப்படையாகச் செய்கின்றோம்.

அமெரிக்காவைச் சார்ந்த கால்வின் ஹால் என்பவர் கனவுகளுக்கு விளக்கம் தரும் கலையில் கை தேர்ந்தவர். "தூக்கத்தில் கண்ணால் பார்க்கக் கூடிய உருவங்களின் வரிசையே கனவு" என்று இவர் கூறுகின்றார். பொதுவாகக் கனவில் ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட காட்சிகளோ இடம் பெறலாம். கனவு காண்பவரைச் சேர்த்து இன்னும் பல பாத்திரங்கள் காட்சி அளிக்கின்றனர். கனவு காண்பவரை முதன்மையாக உள்ளடக்கிய பல செயல்கள் நடைபெறுகின்றன. கனவு காண்பவரே கனவின் கதாநாயகனாக விளங்குகின்றார். கனவில் நடைபெறும் முதன்மையான காட்சிகள் அவரை மையமாகக் கொண்டு இயங்குகின்றன. கனவு காண்பவர் காட்சியில் பங்கேற்பவராகவும், காட்சியைக் கண்டு களிப்பவராகவும் இருக்கின்றார். எனவே கனவைப் பேசாத் திரைப்படம் (Motion Picture) என அழைப்பது மிகப்பொருத்தமாகும்.

கனவு ஒரு மாயக் காட்சியாக இருக்கின்ற போதிலும் கனவு காண்பவர் உண்மையாக நடைபெறும் நிகழ்ச்சியைக் கவனித்துக் கொண்டிருப்பது போல மிகுந்த ஈடுபாட்டுடன் கனவைக் கண்டு களிக்கின்றார்.

### கனவுகளின் வகைகள் (Types of Dreams)

எந்த ஒரு கனவும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஒவ்வொரு கனவுக்கும் தனித்தன்மை வாய்ந்த வேறுபாடுகள் இருக்கும். கனவுகளின் பண்புகளும் பணிகளும் மாறுபடுகின்றன. கனவு உலகம் ஒளிவு மறைவற்ற இயற்கையான ஒரு உலகம். கொலை செய்தல், செக்ஸ் உறவு கொள்தல் முதலான காரியங்கள் கனவில் எந்தவித பயமோ, திகைப்போ இல்லாமல் வெளிப்படையாக நடைபெறுகின்றன.

கனவுகள் மனிதனின் எல்லாப் பக்கங்களையும் இயற்கையாக உள்ளவாறே வெளிப்படுத்துகின்றன. நாம் ஒவ்வொரு கனவையும் வரிசைப் படுத்தி, பகிர்ந்து, பகுத்து ஆராய்ந்து விளக்கம் காண முற்படும்போது நாம் நம்மையே ஏற்றுக்கொள்கிறோம். அவ்வாறு நம்முடைய நிறைகுறைகளை ஏற்று வாழ முயற்சிக்கும் போது நம்முடைய ஆளுமை முழுமை பெறுகிறது. நம்முடைய கனவைப் பகிர்ந்து கொள்வதன் வழியாக நாம் நம்மைப் பற்றி முழுமையாக அறிகின்றோம். ஒருவருடைய ஆளுமையைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ள கனவு மிகவும் அவசியம். நாள்தோறும் நாம் கனவை ஆராய்ந்து பார்ப்பதன் வழியாக நாம் நம்முடைய மனதின் ஒப்பற்ற ஆற்றலை அறியலாம். அந்த ஆற்றலை முழுவதும் பயன்படுத்துவதற்குத் தடையாக இருக்கின்ற காரணிகளை அகற்றலாம்.

கனவுகள் பல வகைப்படும். ஒவ்வொன்றையும் வாழ்க்கை உதாரணங்களோடு சுருக்கமாகப் பார்ப்போம்.

### கொடுங்கனவு (Nightmare)

இவை பயங்கரமான கனவுகள். ஒருவர் உணர்வு நிலையில், மனமார எதிர்கொள்ளத் தயங்கும் விருப்பமற்ற பயங்கரமான நிகழ்ச்சிகள், உணர்வற்ற நிலையில் பேராற்றலுடன் பயமாக உருவெடுத்து பயங்கரக் கனவாக வெளிப்படுகின்றன. நான் துவக்கநிலைப் பணியாளராக இருந்தபோது பார்த்த கனவு இன்றும் நினைவில் இருக்கிறது. 'அதிகாலை மூன்று மணியிருக்கும். படுக்கையை விட்டு எழும்பினேன். வியர்த்துக் கொட்டியது. நெஞ்சு அதிவேகமாக அடித்தது. கனவில் விநோதமான கொடிய மிருகங்கள் என்னைத் துரத்திக் கொண்டு வந்தன. கூரிய நகங்களையுடைய நான்கு கைகளும், எட்டுக்கால்களும் கொண்ட குதிரை வடிவத்தையொத்த ஒரு மிருகம், அதன் கண்கள் நெருப்புப் போல ஒளி வீசின, கூரிய நகங்களையுடைய தன்னுடைய நீண்ட கைகளை நீட்டிய வண்ணம் என்னை நோக்கிப் பாய்ந்தது. நான் தப்பித்துக்கொள்ள ஓடினேன். ஆனால் அந்தப் பக்கத்திலிருந்து இன்னொரு மிருகம் என்னை நோக்கி வந்தது. அது ஒரு பெண்ணின் உடம்பையும் சிங்கத்தின் முகத்தையும் கொண்ட ஒரு மிருகம். அந்த இரு மிருகங்களும் என்னை நெருங்கி வரவும் நான் விழித்துக் கொண்டேன்'.

இந்தக் கனவுக்கு நான் விளக்கம் இங்கு தரவில்லை. ஆனால் முந்தைய நாள் நடந்த நிகழ்ச்சியை இந்தக் கனவோடு தொடர்புபடுத்திப் பார்த்தபோது அதன் அர்த்தம் எனக்குப் புரிந்தது. முந்தைய நாள் நடந்த நிகழ்ச்சி என்னை மிகவும் பயமுறுத்தியது. அந்தப் பயத்தை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதாவது நான் உணர்வு நிலையில் மனமார ஏற்றுக்கொள்ளத் தயங்கிய ஒரு நிகழ்ச்சி, நான் தூங்கும் போது உணர்வற்ற நிலையில் பயங்கரமான கனவாக உருவெடுத்தது என்பது துல்லியமாகத் தெரிகின்றது.

மேலும், இது குணப்படுத்தும் ஆற்றல் கொண்ட ஒரு கனவு. இது மனித உணர்வுகள் குறித்து என் ஆழ்மனதில் புதைந்து கிடந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயத்தை எனக்கு வெளிப்படுத்துகின்றது. எனக்குத் தெரியாத ஒரு பேருண்மையை, என் ஆளுமையின் மறைந்த ஒரு பகுதியை உள்ளவாறே எனக்குக் காட்டுகின்றது. அந்தப் பயத்தை நான் ஏற்றுக் கொண்டு அந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காணும் வழியை நான் தேர்ந்துகொள்ள எனக்கு ஒரு தூண்டு கோலாக இருந்தது என்பதில் ஐயம் இல்லை.

கொடுங்கனவுகள் குணப்படுத்தும் ஆற்றலை வெளிப்படுத்துகின்றன. கனவுச் சூழ்நிலைகளை எதிர்கொண்டு பிரச்சனைகளைத் தீர்வு காண வழி வகுக்கின்றது. பதட்டத்தை உருவாக்கும் சூழ்நிலை களையும் தைரியமாக எதிர்கொள்ள கனவுகள் உதவு கின்றன.

### மேலான சிறந்த கனவு (Great Dreams)

இக்கனவுகள் நம்முடைய வாழ்வின் மேன்மையான முக்கியத்துவமான சிறந்த அனுபவங் களைப் பிரதிபலிக்கின்றன. மனிதனுடைய அடிமட்ட ஆளுமையின் குறியீட்டுரு என்றும் அழைக்கலாம். இவை ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்டவை. இக்கனவுகளின் அர்த்தம் நம்மை வியப்பில் ஆழ்த்து கின்றன. இவை குணப்படுத்தும் தன்மை வாய்ந் தவை.

உலகத்தின் பெரிய மனிதர்களில் பலர் மெய்மையோடு (High Reality) பலவழிகளில் தொடர்பு கொண்டுள்ளனர். அவ்வழிகளில் ஒன்றே கனவு. சிறந்த கனவுகள் ஒரு மனிதனின் வாழ்க் கையையே மாற்றி மேலானதாக அமைக்கும் தன்மை உடையவை. கார்ல் யூங் தன்னுடைய மேலான கனவுகளின் வழியாகத் தன்னுடைய கனவுக் கோட்பாட்டை சிறப்பானதாக மாற்றியுள்ளார். இளைஞரின் தந்தை என்றழைக்கப்படும் தொன் போஸ்கோ “சலேசியன் சபை”யைத் தோற்றுவித் தவர். இவருடைய மேலான கனவுகளே இவரை இம்மேலான பணி நிலைக்கு மாற்றின. அவர் கண்ட முதலாவது மேலான கனவை நான் உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

“நான் ஒன்பது வயது சிறுவனாக இருந்த போது நான் கண்ட ஒரு கனவு, என்னுடைய பிற்கால வாழ்க்கையை முன்னறிவிக்கும் அழியாத ஒரு முத்திரையாய் அமைந்தது. கனவில் நான் என்னு டைய வீட்டின் அருகேயுள்ள ஒரு விளையாட்டு மைதானத்தில் நின்று கொண்டிருந்தேன். அங்கே பல சிறுவர்கள் பொழுதை மகிழ்ச்சியாகக் கழித்துக் கொண்டிருந்தனர். அவர்களுள் சிலர் விளையாடிக் கொண்டிருந்தனர். சிலர் சிரித்துக் கொண்டிருந் தனர். சிலர் கெட்ட வார்த்தை பேசிக் கொண்டிருந் தனர். நான் அவ்வார்த்தைகளைக் கேட்டு அதிர்ச்சிய டைந்து அவ்வார்த்தைகளை நிறுத்தச் சொல்லி அவர்களை அடிக்கத் தொடங்கினேன். அந்தக் கணமே அற்புதமாக ஆடையணிந்த ஒரு மனிதர் என் முன்னே காட்சியளித்தார். அவர் வெண்ணிற ஆடை அணிந்திருந்தார். அவருடைய முகம் பிரகாச மாக இருந்ததால் அவரை நேராகப் பார்க்க முடிய வில்லை. அவர் என்னைப் பெயர் சொல்லி அழைத்து “நீ இச்சிறுவர்களை அன்பாலும், கனிவாலும், இரக்கத்தாலும் வெல்ல வேண்டும்; உதைகளால் அல்ல. அதனால் இப்போதிருந்தே பாவம் அருவருப் பானதென்றும், நற்குணமே அழகானதென்றும் இவர்களுக்கு எடுத்துச்சொல்” என்றார்.

நான் பயத்துடன் குழப்பமடைந்து ‘நானே ஒரு சிறுவன். அவர்களிடம் நான் மதத்தைப்பற்றி மட்டும்தான் பேசமுடியும்’ என்று பதில் கூறினேன். அந்த நேரமே எல்லாச் சண்டைகளும் வசை மொழி கூறுதலும் நின்று போயின. அப்போது அந்த சிறுவர் கள் என்னைச் சூழ்ந்து கொண்டனர்.

‘என்னால் முடியாத ஒரு செயலை நீங்கள் என்னிடம் செய்யக் கட்டளையிடுவது ஏன்?’ என்று மறுபடியும் கேட்டேன். அதற்கு அவர் ‘எது உன்னால் முடியாத காரியம்?’ என்று கேட்டு ‘நீ அறிவு பெறுவ தாலும், கீழ்ப்படிதலாலும் இதை உன்னால் சாதிக்க முடியும்’ என்றார்.

நானோ, ‘எங்கே? எப்படி?’ என்றேன். அதற்கு அவர் ‘நான் உனக்கு ஓர் ஆசிரியரைத் தருவேன். அவர் உனக்கு வழி காட்டுவார். அதனால் நீ அறிவு பெறுவாய். அந்த அறிவு இல்லாதிருந்தால் எல்லாமே மடமை’ என்றும் கூறினார்.

ஆனால் ‘நீர் யார்?’ என்றேன் நான். ‘உன் அம்மாவால் கற்றுத்தரப்பட்டு ஒரு நாளைக்கு மூன்று வேளை நீ வாழ்த்துகின்ற அன்னையின் மகன்’ என்றார்.

‘எனக்கு அறிமுகமில்லாத யாரிடமும் நான் என் அம்மா உத்தரவில்லாமல் பேசக் கூடாதென்று என் அம்மா சொல்லியிருக்கிறாள். அதனால் தயவு செய்து உங்கள் பெயரைச் சொல்லுங்கள்’ என்று கேட்டேன்.

அவர் ‘என் அம்மாவிடம் கேள்’ என்றார். உடனே நான் கம்பீரமான தோற்றமுடைய நட்சத் திரங்களால் அலங்கரிக்கப்பட்டது போன்ற ஆடைய ணிந்த ஒரு பெண் அவர் அருகில் நிற்பதைக் கண்டேன். அவள் சைகை காட்டி என்னை அழைத்து என்னுடைய கையைப் பரிவாகப் பற்றிக்கொண்டு ‘அங்கே பார்’ என்றாள். நானும் அவ்வாறே செய்தேன். அப்போது அந்தக் குழந்தைகள் எல்லோரும் அவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடத்தை விட்டு மறைந்திருந்தனர். அவர்கள் நின்றிருந்த இடத்தில் நாய், பூனை, கரடி முதலிய மிருகங்கள் நிற்பதைப் பார்த்தேன். 'இது தான் உன்னுடைய களம். இதில் தான் நீ பணியாற்ற வேண்டும். நீ எளிமையாகவும் திடமாகவும் இருக்க வேண்டும். இந்த விலங்குகளுக்கு நிகழப்போவதை நீயும் உன்னுடைய குழந்தைகளுக்குச் செய்ய வேண்டும்'.

நான் திரும்பவும் பார்த்தேன். அந்த விலங்குகள் எல்லாம் வெள்ளாட்டுக் குட்டிகளாக மாறியிருப்பதைக் கண்டேன். அவை அந்த மனிதனையும், பெண் மணியையும், வரவேற்கும் வகையில் குரல் எழுப்பின.

இந்த நேரத்தில் நான் அழத் துவங்கினேன். 'நான் மிகவும் குழம்பிய நிலையில் இருக்கின்றேன். அந்தக் காட்சியின் அர்த்தம் என்ன?' என்று எனக்குச் சொல்லுங்கள் எனக் கேட்டேன். உடனே அவள் என் தலைமீது கை வைத்து இன்னும் சிறிது காலத்தில் எல்லாம் உனக்குப் புரியும் என பதிலுரைத்தாள். ஏதோ சத்தத்தால் நான் விழித்துக் கொண்டேன். அப்போது எல்லாக் காட்சிகளும் மறைந்திருந்தன. நான் மிகுந்த பயம் கலந்த திகைப்புக்குள்ளானேன்.

புனித தொன் போஸ்கோ கண்ட கனவு மேலான ஒரு கனவு. அவரது வாழ்க்கை நிலையையே மாற்றி அமைக்கும் தன்மை வாய்ந்த ஒரு கனவு. அவர் பிந்திய காலத்தில் சலேசிய சபையைத் தோற்றுவித்து இளைஞர்களுக்கு சிறப்புப் பணி செய்தார். எனவே மேலான கனவுகள் ஒருவரின் இயற்கை நிலையை சிறப்பானதாக மாற்றி அமைக்கின்றன என்பது தொன் போஸ்கோ கண்ட கனவு வழியாக நமக்குத் தெளிவாகின்றது.

நன்றி:- **டாக்டர் அ. அல்போன்ஸ்**
**"கனவுகள், கற்பனைகள், காவியங்கள்"**
*(Dream Analysis)*

# மனப்பான்மை எப்படி....

**- யாழ். ராதவல்லி -**

குழந்தைகள் மொழியையும், வேறு பல திறமைகளையும் சமூகமயமாக்கலில் கற்றுக் கொள்வது போலவே மனப்பான்மைகளையும் கற்றுக் கொள்ளுகின்றார்கள். இந்த மனப்பான்மைகளுக்கு ஒருவர் வளரும் சூழலும், நண்பர்களும், பெற்றோர்களுமே முக்கிய காரணங்களாக அமைகின்றனர்.

எம்முடன் நெருங்கிப் பழகுகின்றவர்களின் மனப்பான்மைகளை ஆதரித்து, அதனை மெல்ல மெல்லக் கற்றுக் கொள்ளுகின்றோம். இதனால் தான் புனித பவுல் கூறுகின்றார். "நீங்கள் ஏமாந்து போக வேண்டாம். தீய நட்பு நல்லொழுக்கத்தைக் கெடுக்கும்." (1 கொரி 15:33)




எமது மனப்பான்மைகளைப் பொறுத்தே நாம் வாழும் சமூகத்தை அவதானிக்கும் முறைகளும், எமது வாழ்வின் இலக்குகளும் அடங்கி இருக்கின்றன. இன்று எம்முடன் யார் பழகுகின்றார்கள்? எதற்காகப் பழகுகின்றார்கள்? என்பதெல்லாமே எமது மனப்பான்மையின் அடிப்படையிலேயே தங்கியுள்ளது.

சிலருக்கு நம்பிக்கையுள்ள, எதையும் தாங்கும், பாராட்டும், ஆர்வமான மனப்பான்மை இருக்கின்றது. இத்தகைய தன்மை கொண்டோர் கஷ்டமான சூழ்நிலைகளையும் வெற்றி கொள்வார்கள் என்பது உறுதி.

மாறாக ஒத்துழைக்காத, நம்பிக்கையற்ற, ஆர்வமற்ற, பிறரைத் தூற்றும் மனப்பான்மையுள்ளவர்களுக்கே துன்பங்கள் அதிகமாக ஏற்படுகின்றன. இவர்கள் இத்துன்பங்களைத் தாங்கிக் கொள்ள முடியாது அந்தரிக்கின்றனர். தவறான மனப்பான்மையுள்ளவர்கள் எதைக் கண்டாலும், அதாவது திருப்தியான வாழ்விலும் குறை குற்றம் காணும் மனிதர்களாகவே இருப்பார்கள்.

இன்று நாம் யார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

ஆழியோன்

*இம்முறை இலக்கிய மஞ்சரியில் நம் வாழ்க்கையில் நடைபெற்ற சில வித்தியாசமான சம்பவங்களைப் பற்றிப் பார்ப்போம்.*

புகையிரதங்கள், புகையிரத நிலையங்களில் இருந்து புறப்பட்ட பின்னர் யார் ஓடிவந்தாலும் அவை நிறுத்தப்படுவதில்லை. புறப்பட்டது புறப்பட்டதுதான்; ஏறவந்தவர் பிந்தினால் பயணம் ரத்துதான். ஆனால் அண்மையில் வியப்பான வித்தியாசத்தை அனுபவித்து இரசிக்க முடிந்தது.

மட்டக்களப்பிற்கும் கொழும்பிற்கும் இடையில் சுமார் மூன்று நேரடி புகையிரத சேவைகள் இடம் பெறுகின்றன. கொழும்பில் இருந்து காலை 8.45க்கும் பின்னர் இரவு 7.15க்கும் (நகரிடை கடுகதி வண்டி) தொடர்ந்து இரவு 10.00 மணிக்கும் மட்டக்களப்பிற்குப் புகைவண்டிகள் புறப்படுகின்றன.

இரவு 10.00மணிக்குப் புறப்படும் புகைவண்டி மறுநாள் காலை 9.30 மணியளவில் மட்டு நகர் சென்றடையும். சில வாரங்கட்கு முன்பு பாடசாலையொன்றின் 'டென்னிஸ்' விளையாட்டு வீரர்களை அழைத்துக்கொண்டு மட்டக்களப்பு திரும்ப வேண்டியிருந்தது. இரவு 10.00 மணி புகைவண்டியில்தான் புறப்பட்டோம். இவ்வண்டி காலை 9.00 மணியளவில் வந்தாறுமூலையில் உள்ள புகைவண்டித் தரிப்பிடத்தில் நின்றது. தரிப்பிடம் என்று ஏன் குறிப்பிடுகின்றேனென்றால் அங்கு கட்டடங்களோ அல்லது மழை, வெயில் என்பனவற்றிற்கு ஒதுங்கும் இடமோ இல்லை. மணற்றிட்டியால் அமைக்கப்பட்ட புகையிரத மேடை மட்டும்தான் உண்டு. அதுவும் சுமார் இரண்டு புகையிரதப் பெட்டிகளின் நீளத்திற்கு சமனான நீளத்தில்தான்.

புகைவண்டிக் காவலர் கையால் சைகை செய்தார்; ஆனால் புகைவண்டி புறப்படவில்லை. காவலர் எட்டிச் சாரதியைப் பார்த்தார். சாரதியோ "எஞ்சினில்" இருந்து எட்டிப் பின்பக்கம் பார்த்துக் கொண்டிருந்தார். தூரத்தே ஓர் ஆச்சியும் சிறு பையனும் 'ரயிலில்' ஏற ஓடிவந்து கொண்டிருந்தனர். அவர்கள் ஓடிவந்து ஏறுவது என்றால் சுமார் 5 நிமிடங்களாவது எடுக்கும். திடீரென்று புகையிரதக் காவலர் சாரதிக்கு சமிக்ஞையொன்றை கையால் காட்டினார். புகைவண்டி பின்னோக்கி நகரத் தொடங்கியது. ஆச்சிக்கு அண்மையில் வண்டி வந்த பின்னர் அது நின்றது. ஆச்சியையும் பையனையும், ஒருவர் கை நீட்டிப்பிடித்து உள்ளே ஏற உதவி செய்தார். ஆச்சியும் பையனும் ஏறியபின் வண்டி முன்னோக்கி ஓடத்தொடங்கியது.

உண்மையில், மனதிற்கு நிறைவாகத்தான் இருந்தது. ஒரு வித்தியாசமான அநுபவம் தான். கல்லோயாவில் இருந்து மட்டக்களப்பு வரைக்கும் 'காவலர் பச்சைக் கொடியையோ சிவப்புக் கொடியையோ காட்டவில்லை. எல்லாம் கைசைகைதான். அத்துடன் அவருக்கு தமிழ் சரியாகத் தெரியாது போன்றும் தோன்றியது.

இதனை எழுதிக் கொண்டிருந்தபோது வானொலியின் செய்தியொன்று எம்மை ஆச்சரியப்படவைத்தது. 'காஷ்மீரில் முதன்முறையாக வயோதிபர் இல்லமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது' என்ற செய்திதான் அது. இதன்போது சுமார் முப்பது வருடங்களுக்கு முன்னர் 'வீரகேசரி'யில் வாசித்த சிறுகுறிப்பொன்று எமக்கு ஞாபகம் வந்தது.

ஐரோப்பிய நாடொன்றில் இலங்கை மாணவர் ஒருவர் படித்துக் கொண்டிருந்தார். அவர் எழுதிய குறிப்புத்தான் அது.

அவருடைய பேராசிரியரான ஐரோப்பியர் ஒருவர், அவரை தனது வீட்டிற்கு மதிய போசனத்திற்காக அழைத்து இருந்தார். சாப்பாட்டு மேசையில் மிகவும் வயதான பெண்மணியொருவரும் இருந்தார். பார்வையற்றவர்; மறதியுடையவர்; அவர் பேராசிரியரின் தாயார்.

எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருக்க, அப்பேராசிரியரோ தனது தாயாருக்கு 'கரண்டியால் சாப்பாடு ஊட்டிக்கொண்டிருந்தார். "அம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்தான் உன்மகன், நான்தான் உன்மகன்" என்றுச் சொல்லிச் சொல்லித்தான் உணவு கொடுத்துக் கொண்டிருந்தார். வெள்ளைக்காரருக்கும் குடும்பம், பாசம் என்றெல்லாம் உண்டு என்று அந்த மாணவர் குறிப்பிட்டிருந்தார்.

வெள்ளைக்காரார்கள் தம் பிள்ளைகளை பதினெட்டு வயதில் வீட்டைவிட்டு வெளியேற்றி விடுவார்கள். அடிக்கடி ஏற்படும் விவாகரத்துகள், மறுமணங்கள், கலாசாரச் சீரழிவுகள் என்றவாறான செய்திகள் எல்லாம் எம்மனதில் வித்தியாசமான, எதிர்மறையான பதிவுகளைத்தான் ஏற்படுத்தி இருந்தன. ஆனால் இச் சிறுகுறிப்பு அதனை மாற்றிவிட்டிருந்தது. எனவே அந்த முகம் தெரியாத அக்காலத்து மாணவருக்கு காலம் கடந்த நன்றிகள்.

# அஃறிணைகள்

ஒருவன் மனதில்
எழுந்த எழுச்சிதான்...
புரட்சியாகிப்
பூகம்பமாகி
மறுமலர்ச்சியானது.... ஆனால்,
எழுச்சியை
ஏற்போரும் உண்டு.
எள்ளிநகையாடி,
எதிர்த்தெறிவோருமுண்டு...
புரட்சிவீரர்களின்
மரணங்கள் கூட,
மர்மமானவைதான்...
கறுப்பின வாதத்தைக்
கத்தரித்த அபிரகாம்லிங்கனை
ஒன்றரை அங்குல
இரும்புத் தோட்டா அடக்கியது....
இந்தியநாட்டிற்காக,
சுதந்திரம் கேட்ட,
மகாத் மாவையும்
இடித்துச் சாய்ந்தது இரும்புதான்...
சோக்கிரட்டீசை,
சோரச் செய்தது
ஒரு கோப்பை நஞ்சு,.....
இயேசு நாதரை
இரணமாக்கியது...
மரத்தாற் செய்த சிலுவை...
எழுச்சி வீரர்களுக்கும்
சாவுமணி அடிக்கச்
சதிகாரர்கள்
முளைக்காமலில்லை...
நாலுபேர்வரவேற்றாலும்,
நரிபோல் ஒருவன்
நடித்துக் கெடுப்பான்...
நான் கற்பனை செய்யவில்லை...
கடந்த காலச் சரித்திர ஏடுகள்
பதித்துச் சென்ற
அடையாளங்கள்... இவை...
அது, அற்றினாலும், இன்றுவரை
வடுக்கள் வாடாதவைதான்...
மறுமலர்ச்சிகாணவிரும்பினால்
முதலில் - நீ உன்னை
மரணத்திற்குத்
தயார்படுத்திக் கொள்...
மனிதர்களெல்லாம் மனிதர்களல்ல..
மாக்களும் மறைந்திருக்கத்தான்
செய்கிறது... உயர் திணைக்கு
உரித்தில்லாதவர்கள் - பாவம்,
அஃறிணையில்
அடங்கிவிடுகிறார்கள்...

**வயலற் சந்திரசேகரம்** B.Com Dip-in.Ed



## கடவுளுக்கும் நமக்கும் உள்ள இடைவெளி

"கடவுளுக்கும் நமக்கும் உள்ள இடைவெளி எவ்வளவு? என்று ஒருவர் சுவாமி சின்மயானந்தரிடம் கேள்வி எழுப்பினார். அதற்கு சுவாமிகள்" என்னுடையது என்று எதையெல்லாம் நீங்கள் எண்ணுகிறீர்களோ அதையெல்லாம் எழுதிக்கொண்டே போங்கள். பட்டியல் எவ்வளவு நீளம் வருகிறதோ அவ்வளவு தூரம்தான் கடவுளுக்கும் நமக்கும் இடையேயுள்ள தூரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- மெற்றில்டா இராஜேந்திரம் -

### ஆரம்பக் கிறிஸ்தவ சமூகமும் அசீபா முறையும் (அன்பியம்)

**ஆதிக்கிறிஸ்தவச் சபைகள்:**

தூய ஆவியின் வருகையின் பின் கிறிஸ்தவர்கள் பயமின்றி, கிறிஸ்துவுக்காகத் தம்மைக் கையளித்து நற்செய்தியைப் போதித்தனர். விசுவாசத்தைத் தம் செயல்களால் காட்டினர். நம்பிக்கை கொண்ட மக்களனைவரும் ஒரே உள்ளமும், ஒரே உயிருமாய் இருந்தனர். அவர்களுள் எவரும் தமது உடைமைகளைத் தம்முடையதாகக் கருதவில்லை. எல்லாம் பொதுவானதாக இருந்தது. திருத்தூதர் அனைவரும் ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்தார் என மிகுந்த வல்லமையுடன் சான்று பகர்ந்து வந்தனர். அவர்களனைவரும் மக்கள் நல்லெண்ணத்தைப் பெற்றிருந்தனர். தேவையில் உழல்வோர் எவரும் அவருள் காணப்படவில்லை. தி.தூ.பணிகள் 2:44-47. ஆதிக்கிறிஸ்தவ குழுக்களிடையே அச்சாதாரண பழக்கவழக்கங்கள் அவர்களது ஆன்மீக வாழ்வுக்குப் போசாக்காக அமைந்தன.

**ஆரம்பக் கிறிஸ்தவச் சபை ஒன்றியம்:**

21ம் நூற்றாண்டில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் ஆதிக்கிறிஸ்தவர் மத்தியிலிருந்த குணாதிசயங்களைக் கண்டு பாவித்தல் அவசியமாகும். அவை படிப்படியாக எம்மிலிருந்து மறைந்ததால், திருச்சபை பங்கு கொள்ளும் சபையொன்றை உருவாக்க முயற்சியெடுத்துள்ளது. இது கிறிஸ்தவ குடும்பங்களாலானது. 1948ல் ஆயர்பேரவை இது பற்றிய திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியது. சிறிய குழுக்களின் தொகுப்பாக இது காணப்படும். கிறிஸ்துவை மையமாகக்கொண்டு தமது ஆன்மீக, சமூக சீவியத்தை விருத்தி செய்ய இவர்கள் வழிகாட்டலைப் பெறுவர்.

**இத்தகைய சமூக ஒன்றியங்களில் காணப்படும் இலட்சணங்கள்.**

1. அன்பு, பிறர் சிநேகம்.
2. பரிசுத்த நற்செய்தியைப் படித்தல்.
3. தூய ஆவியின் வழியில் செல்லுதல்.
4. கிறிஸ்துவை மத்தியஸ்தமாகக் கொள்ளுதல்.
5. கிறிஸ்தவ விழுமியங்களுக்கு மதிப்பளித்துப் பகிர்ந்து கொள்ளுதல். மன்னிப்பு, திருவருட்சாதனங்களை அர்த்தத்துடன் முறையாகப் பெறக் கிறிஸ்தவ ஒன்றியங்கள் வழியாக முன்மாதிரிகையும், வழியும் காட்டப்படுகிறது.

**கிறிஸ்தவ சமூக ஒன்றியங்களின் நோக்கமும் சேவையும்:**

1. மனித உறவைக் கட்டியெழுப்புதல்.
2. ஆன்மீக வளர்ச்சி.
3. குறிக்கோளில் மாற்றத்தை ஏற்படுத்துதல்.
4. குழுக்களின் அந்நியோன்னியப்பகிர்வு.
5. தேசிய உறவுகளைப் பலப்படுத்துதல்.
6. சமுதாயத்திலிருந்து உயிர்களைக் காப்பாற்றல்.
7. இறைவனுக்குச் சாட்சி பகர ஒரு சமூகத்தை உருவாக்கல்.
8. இறைவனுக்கு நன்றியும், மகிமையும், வணக்கமும் அளித்தல்.

**அசிபா (அன்பிய முறையின் மூலம் புத்தொளி பெற்ற சமுதாயத்தை உருவாக்குவோம்)**

பங்குகொள்ளும் சமூகத்தைக் கரைசேர்க்க கி.பி. 1990ல் 'அசிபா'முறை அறிமுகம் செய்யப்பட்டது. அதாவது பங்கு கொள்ளும் சபையின் வழியாகக் குருத்துவ 'துறவற' இல்லறத்தைச் சார்ந்த அனைவரதும் பங்களிப்பைப் போதியளவு பெற்றுச் செயற்படுவதாகும். இது உறவு மனப்பான்மைச் சபையென அழைக்கப்படுகிறது. சிறு கிறிஸ்தவ ஒன்றியங்கள் மூலமாக அன்பு முறையைப் பரப்புவதற்கு முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, கிறிஸ்தவ ஒன்றியங்கள் சகல பங்குகளிலும் செயற்படுத்தப்படும். இவை பங்குமட்டத்திலும், மறைமாவட்ட மட்டத்திலும் பரவிச்செல்லும் திட்டத்துடன் உறவைக் கட்டியெழுப்புவதாக உள்ளது. வேதாகமத்தை ஆதாரமாகக் கொண்டு செயற்படும் இந்த முறையே 'அசிபா'முறை எனப்படும். இது ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ச்சொல் அல்ல. ஆங்கிலச் சொற்கள் நான்கின் முதல் எழுத்துக்களைக் கொண்டு ஆக்கப்பட்டது.

1. ஆசிய - ASIAN - **AS**
2. ஒருங்கிணைதல் - INTERGRAL - **I**
3. மேய்ப்புப்பணி - PASTROL - **P**
4. அணுகுமுறை - APPROACH - **A**

- **ASIPA**

**1) ஆசிய:**

கிறிஸ்துவை மையமாக வைத்து ஆசியாவின் ஏழைமக்களின் உண்மை நிலையைச் சிந்தித்து, நற்செய்தியடிப்படையில் விடுதலையைப் பெற்றுக் கொடுக்க உதவி செய்தல், இதற்கான ஆன்ம சக்தியை வளர்க்க வழிகாட்டுதல்.

**2) ஒருங்கிணைதல்:**

இதில் ஆன்மீக வாழ்வுக்கும், சமுதாய வாழ்வுக்குமிடையே இருக்க வேண்டிய சமநிலை சம்பந்தமான அறிவுறுத்தல் வழங்கப்படுகிறது. சடங்குகளும், தியானமும் நாளாந்த வாழ்வில் ஒரு செயலை நன்றாகச் செய்யத் தேவையாகும். பொது, தனி வாழ்க்கை முறைகளிடையே சமநிலையைப் பேணுவதன் மூலம் திருச்சபையின் அதிகாரங்களுக்கு மதிப்பளித்து, இல்லறத்தாரின் பொறுப்பையும், அர்ப்பணத்தையும் விருத்தி செய்யத் தேவையான வழிகளைப் பின்பற்றச் செய்தல்.

**3) மேய்ப்புப்பணி:**

திருச்சபையிலும், உலகிலும் இல்லறத்தாரின் மேய்ப்புப்பணி பற்றி எடுத்துரைப்பதே நோக்கம். தம் நாளாந்த வாழ்வின் செயல்கள் மூலம் கிறிஸ்துவுக்குச் சாட்சி பகரவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**4) அணுகுமுறை:**

கிறிஸ்துவையும், சமூக வாழ்வையும் மையமாக வைத்த மேய்ப்புப்பணி முறையொன்றை நடத்த ஊக்கமளிக்கப்படுகிறது.

திருச்சபையினுள் ஒரு தனி மனிதனின் புதிய செயல்முறை எப்படி இருக்கவேண்டுமென்று கூறி, ஊக்கமளித்தல் அசிபாவால் நடைபெறும். ஒரே விசுவாசத்தைச் செயற்படுத்துவதன் மூலமாக இறைவன் அன்பை எல்லோருக்கும் வெளிப்படுத்தவும் பங்கைத் திருச்சபையுடன் இணைக்கவும் முயற்சிக்கப்படுகிறது.

# நிழல்



ஒளியற்ற ஓர் நிழலில்
தடித்த இருள் மட்டும் எஞ்சியிருக்க
என்றுமே காணக் கூடியவைகளால் மட்டும்
வெளி நிரம்பியிருந்தது.

ஒளிந்து கொள்ளவும் இளைப்பாறவும்
நிழலுக்குள் காலடியெடுத்து நீ
பாதுகாப்பையுணர்ந்தாய் -
உனது தீர்மானங்களிலேயே
உன்னதமானது அது
ஆனால் நிழலோ
தடித்தும் கறுத்துமிருக்கிறது.

உனது மனதின் மூலைகளில் நீ
விட்டுவைத்ததாயெண்ணுவது
கடினத்தையொத்த பயத்தை

இந்த வழியை மீண்டும் கடக்கும் போது
தீயை மூட்ட முயலாதே
சிதையொன்றிலிருந்தெழும் சுவாலைபோல
இருளைப் போக்கிவிடும் அது,

நீசத்தை விட மிக மோசமாக
உண்மையைத் தோலுரித்துக் காட்டும்
உதயத்தின் மென்மையில் களவு போன
திடமான கனவுபோல்

**- அ. ச. பாய்வா -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






**இம்முறை தொண்டனின் சில நிமிடங்கட்காக அரிமாக்கழகத்தின் இளம் உறுப்பினரான திரு. கதிரேசபிள்ளை விருத்தாச்சலம் அவர்களைச் சந்தித்தோம். இவர் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவத் துறையில் இளமாணிப்பட்டம் பெற்றவர்; சிறந்த தலைமைத்துவப் பண்புகள் கொண்டவர்; அங்கு இரண்டு வருடங்கள் மாணவர் தலைவராக இருந்தவர்; சமூகசேவையில் கொண்ட ஈடுபாட்டின் காரணமாக அரிமாக்கழகத்திஙள்ளீர்க்கப்பட்டார். இவரைச்சந்தித்து அரிமாக்கழகம் பற்றி வினவினோம்.**

**☑ நீங்கள் அங்கம் வகிக்கும் அரிமாக் கழகம் பற்றிச் சற்றுக்கூறமுடியுமா?**

➾ மட்டக்களப்பு அரிமாக்கழகத்தில் நான் ஓர் அங்கத்தவராக இருப்பதனையிட்டு பெருமைப் படுகின்றேன். "மெல்வின் ஜோன்ஸ்" என்னும் அமெரிக்கர் இக்கழகத்தை ஆரம்பித்து வைத்தார். 1917ம் ஆண்டு யூன் மாதம் அரிமாக் கழகம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. மெல்வின் ஜோன்ஸ் அவர்கள் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்; பின்னர் படிப்படியாக வாழ்க்கையில் முன்னேறி செல்வந்தர் ஆனார். இவர் நண்பர்களுடன் ஒன்று கூடும்போது மற்றவர்கட்கு உதவ ஆவன செய்யவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அதன் வெளிப்பாடே அரிமாக்கழகம். ஆரம்பத்தில் பார்வை குறைந்தவர்கட்கான உதவிகள் செய்தல், நீரிழிவு நோயாளர்கட்கு ஆதரவு வழங்கல் என்ற பணிகளில் ஈடுபட்டு வந்தாலும் காலப்போக்கில் அரிமாக்கழகத்தின் பணிகள் விரிவடைந்தன. 'சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினமும் அரிமாக் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டதுதான்.

"We serve' என்பதுதான் எமது விருது வாக்கு.

**☑ அரிமாக்கழகத்தின் நிர்வாகக் கட்டமைப்பு பற்றிக் கூறமுடியுமா?**

➾ ஆம்! கூறமுடியும். உலகில் 210ற்கும் மேற்பட்ட நாடுகளில் அரிமாக்கழகத்தின் கிளைகள் உண்டு. இதற்கு சர்வதேசத் தலைவர் ஒருவர் இருப்பார். 2007-2008ம் ஆண்டிற்கான சர்வதேசத் தலைவராக இலங்கையைச் சேர்ந்த லயன் மகேந்திரா அமரசூரியா அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். நாடுகளில் ஆளுநர்கள் இருப்பார்கள். கழகங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆளுநர்களின் எண்ணிக்கை மாறுபடும். இலங்கையைப் பொறுத்தவரையில் 306, 306A, 306B, 306C, ஆகிய இலக்கங்களைக் கொண்ட 'லயன் மாவட்டங்கள்' உள்ளன. மட்டக்களப்பு அரிமாக்கழகமானது 'லயன் மாவட்டம்' $306C_2$ வில் அடங்குகின்றது.

**☑ மட்டக்களப்பு லயன் கழகம் எப்பொழுது ஆரம்பமானது?**

➾ 1974ல் மட்டக்களப்பு லயன் கழகம் ஆரம்பமாகியுள்ளது. இதன் தலைவராக (முதலாவது) லயன். கே. நவரெட்ணராசா அவர்கள் இருந்துள்ளார்கள்.

**☑ அரிமாக்கழகத்தின் ஆளுநர்கள் எப்படித் தெரிவு செய்யப்படுவார்கள்?**

➾ மாவட்டக் கழகங்களின் முக்கிய பதவியுறுப்பினர்களின் (Key Members) தீர்மானப்படி ஆளுநர்கள் தெரிவு செய்யப்படுவர்.

**☑ அரிமாக்கழக உறுப்புரிமை பெற எவ்வாறு விண்ணப்பிக்கவேண்டும்?**

➾ இங்கு ஒருவிடயத்தை நான் குறிப்பிட்டாக வேண்டும். அரிமாக்கழக உறுப்பினராக எவரும் விண்ணப்பித்துச் சேரமுடியாது. ஒருவர் ஏனைய கழக உறுப்பினர்களினால்தான் தெரிவு செய்யப் படுவார். அரிமாக்கழகத்தின் உறுப்பினராக வரும் தகுதியுள்ளவராக ஒருவர் காணப்படுமிடத்து அவர் உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவார். இதற்கு கழக உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவு தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'தகுதி' என்று எதனைக் குறிப்பிடுகின்றீர்கள்?**

தகுதி என்னும்போது அவர் சமூகசேவை செய்வதில் மிகவும் ஆர்வமும், ஈடுபாடும் உள்ளவராக இருக்கவேண்டும். அத்துடன் தனது பொருள் நேரத்தையெல்லாம் சமூக சேவைக்காக அர்ப்பணம் செய்யக்கூடியவராகவும் இருக்கவேண்டும். தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் தொடர்ந்து மூன்று கழக அமர்வுகட்கு வருகை தரவேண்டும். அதன்பின்னர் அவர்கட்கு சம்மதம் எனின் உறுப்பினராக உள்ளீர்க்கப்படுவர்.

**ஒரு சங்கடமான கேள்வி! அரிமாக் கழகத்தில் பணம் படைத்தவர்கள் மட்டுமே உறுப்பினர்களாக இருக்கலாம், ஏனையோருக்கு இடமில்லை என்ற கருத்து நிலவுகின்றதே அது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?**

(சிரிக்கின்றார்) அக்கருத்து முற்றிலும் தவறானது! எவரும் உறுப்பினராக இருக்கலாம்.

அண்மையில், சுனாமி தொடர்பான எமது வேலைத் திட்டங்களைப் பார்வையிட வந்திருந்த முன்னைய உலகத் தலைவர் (அரிமாக்கழக) அவர்கள் சொன்ன விடயமொன்றை இவ்விடத்தில் கூறுவது பொருத்தமானதாக இருக்கும் என எண்ணுகின்றேன். அவுஸ்திரேலியாவில் தபாலகத்தில் வேலை செய்யும் தபால் விநியோகம் புரியும் ஊழியர் ஒருவர் அரிமாக்கழக உறுப்பினராக உள்ளார். அவர் சாதாரண துவிச்சக்கர மிதி வண்டியில் தான் கூட்டங்களுக்கு வருவாராம். ஆனால், நான் அவதானித்தவொன்று, அரிமாக்கழக அமர்வு ஒன்று நடக்கும் போது ஏதாவது ஒருவிடயத்திற்கு உடனடி உதவி தேவையென்று கருதினால் உறுப்பினர்கள் அனைவரும் தமது சட்டைப் பைகளில் இருந்து கணிசமான தொகைகளை உடனடியாகவே எடுத்துக் கொடுக்கும் வல்லமையுள்ளவர்களாகவே உள்ளனர். ஆனால் இவ்வாறு செய்வது கட்டாயமானதல்ல.

**உங்கள் பகுதி அரிமாக்கழகங்கள் அண்மைக் காலங்களில் சந்தித்த பெரும் சவால்கள் என்ன?**

2004ம் ஆண்டு இடம் பெற்ற கடற்பேரலையழிவும், அண்மையில் இடம் பெற்ற படுவான்கரை மக்களின் இடப்பெயர்வும் எமக்குப் பெரும் சவால்களாக இருந்தன. சுனாமியைப் பொறுத்தவரையில் உடனடியான, குறுங்கால, நீண்டகால என வகைப்படுத்தப்பட்ட திட்டங்களைத் தீட்டி உதவினோம். அதே போன்று ஒன்றரை இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்த போது சமைத்த உணவு, உலருணவு, கூடாரங்கள் போன்றனவுட்பட பல்வேறு உதவிகளை வழங்கினோம்.

**மட்டக்களப்பு அரிமாக்கழகம் சில விருதுகளைப் பெற்றுள்ளதாக அறிகின்றோம். அதுபற்றிக் கூறமுடியுமா?**

ஆம்! நாங்கள் புரிந்த சேவைகளின் அடிப்படையில், 2004-2005ம் ஆண்டிற்கான சிறந்த அரிமாக்கழகம் என்ற விருதினைப் பெற்றுக் கொண்டோம். அதேபோன்று அக்காலப்பகுதியில் சிறந்த தலைவராக, முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர் லயன். ஆர். மாணிக்கராசா அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். இவைகள் எமது சேவைகட்கு கிடைத்த அங்கீகாரங்கள் தானே!

**அரிமாக்கழகத்திற்கான வாக்குறுதி ஒன்று உள்ளதே!**


ஆமாம்!

"ஆபத்திற்குள்ளானவர்கட்கு எனது கருணையையும், பலவீனர்கட்கு எனது உபகாரத்தையும், நிர்க்கதியானவர்கட்கு எனது செல்வத்தையும் வழங்குவதன் மூலம் மற்றையோருக்கு உதவி செய்வேன்!" என்பதே அது.

இலங்கை அரிமாக்கழகம் தனது ஐம்பதாவது ஆண்டு விழாவினையும், இலங்கையரொருவர் அரிமாச்சங்கத்தின் உலகத்தலைவராக தெரிவு செய்யப்பட்டதையும் கொண்டாடும் இத்தருணத்தில் "தொண்டனின் சில நிமிடங்கட்"காக பொறுமையாக செவ்வி தந்த ஆசிரியர் லயன். க.விருத்தாச்சலம் அவர்கட்கு தொண்டனின் சார்பில் நன்றி கூறி விடை பெற்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூமி வெப்பமடைதலைத் தடுப்போம்

✦ அட என்ன நீ இன்னும் சமையலை ஆரம்பிக்கவில்லை?

✧ பேப்பரைப் பாருங்க பூமி வெப்பமடைவதைத் தடுக்க வேண்டுமாம், அதனால் அடுப்பு மூட்டவில்லை.

✦ பூமி வெப்பமடைவதைத் தடுப்பதற்கு ஒவ்வொருவரும் பங்களிப்புச் செய்ய வேண்டுமாம்.

✧ நீ என்ன செய்யப்போகிறாய்?

✦ சிகரட் பிடிப்பதை நிறுத்திவிட்டேன்.

✦ இந்தாப்பா ஸர்வர், சூடாக ஒரு கப் டீ கொண்டுவா?

✧ அதெல்லாம் இங்க கிடையாதுங்க பூமி வெப்பமடைவதால் சூடான பானங்கள் எதுவும் தயாரிக்கக் கூடாதென்று முதலாளி சொல்லியிருக்கார்.

ஆசிரியர் : பூமி வெப்பமடைவதை எப்படித் தடுக்கலாம்?

மாணவன் : சூரியன் உதிக்காமல் செய்ய வேண்டும்.

பூமி வெப்பமடைவதைத் தடுக்க நமது அரசாங்கம் சில அவசர நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

என்ன நடவடிக்கைகள்?


தீப்பெட்டிகளை யாரும் பாவிக்கக்கூடாது. எல்லா வகையான அடுப்புகளும் தடை செய்யப்பட்டுள்ளன. சூடான பானங்களை எவரும் தயாரிக்கக் கூடாது.

* நமது அமைச்சர் இவ்வளவு வெகுளியாக இருப்பார் என்று நான் நினைக்கவேயில்லை.

* ஏன்? என்ன நடந்தது?

* பூமி வெப்பமடைவதைத் தடுக்க இனிமேல் வயலில் யாரும் சூடு அடிக்கக் கூடாதென்கிறார்.








**இரா.நாகலிங்கம் (அன்புமணி)**
19, சூரியா வீதி, மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரினவாதமும் பிளவுபட்ட தேசியவாதமும் (கி.பி. 1921 – கி.பி. 2005)






**$RR_1$ (1995) மூன்றாம் கட்ட ஈழப்போர், சந்திரிக்கா அம்மையாரின் சமாதானத்திற்கான யுத்தம். :-**
1977 - 1994 ஆகஸ்ட் வரை ஆட்சி செய்த ஐ.தே.க. அரசாங்கம் சமாதானத்திற்கான சந்தர்ப்பங்களைக் கைநழுவவிட்டது. பேரினவாத அரசாகவே தன்னை வெளிக்காட்டியது. மேலும் 1994 இல் பாராளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித்தேர்தல்கள் நடைபெற்றன. சமாதான தேவதையாக முகம் காட்டிய சந்திரிக்கா அம்மையார் 'என்ன விலை கொடுத்தேனும் சமாதானத்தை நிலைநாட்டுவேன்' என்று தேர்தல்களில் முழங்கினார். இரு தேர்தல்களிலும் பொதுசன முன்னணி (P.A) வெற்றி பெற்றது. அம்மையார் சகல அதிகாரங்களுடன் ஆட்சி பீடமேறினார். சமாதானத்திற்கான தீர்வுப்பொதியை அம்மையாரின் அரசாங்கம் தயாரித்தது. தீர்வுப் பொதியை தேசிய மட்ட விவாதத்திற்கு ஜனாதிபதி முன்வைத்தார். அதன் சாறெல்லாம் பேரினவாதிகளால் உறிஞ்சப்பட்டன. இறுதியாக சக்கையான தீர்வுப்பொதி புஸ்வாணமாகியது. ஏற்கனவே சந்திரிக்கா அம்மையார் யுத்தத் தவிர்ப்பு நடைமுறையை எல்.ரி.ரி.ஈ யினருடன் மேற்கொண்டிருந்தார். அந்த யுத்தத்தவிர்ப்பு முடிவிற்கு வந்தது. அது புலிகளின் பார்வையில் மூன்றாம் கட்டப் போராகவும், சந்திரிக்கா அம்மையார் போக்கில் சமாதானத்திற்கான யுத்தமாகவும் அமைந்தது. தனது தாய்மாமனார் அனுருத்த ரத்வத்தை அவர்களுக்கு பிரதிப் பாதுகாப்பு அமைச்சினை வழங்கியிருந்த அம்மையார், யாழ்ப்பாணத்தைப் புலிகளிடம் இருந்து விடுவிப்பதற்கான யுத்தத்தை ஆரம்பித்தார். இராணுவக் குவிப்பு - ஆயுதக் குவிப்பு மூலமாகவும் பெருமெடுப்பில் மேற்கொண்ட 'சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கை' அம்மையாருக்குத் தற்காலிக வெற்றியை அளித்தது. அதன் பின்னர் மேற்கொண்ட 'வெற்றி நிச்சயம்' 'தீச்சுவாலை' 'ராணுவ நடவடிக்கைகள்' தோல்வியுற்றன. மேலும் புலிகளின் ஓயாத அலைகள் நடவடிக்கை அம்மையாரின் தற்காலிக வெற்றியை தடம் புரள வைத்தது. எல்.ரி.ரி.ஈ இனரின் பலம் அதிகரித்தது. மூன்றாம் கட்ட ஈழப்போர் கொழும்பு வரை நீண்டது. ரத்மலான விமானத்தளம் பாரிய சேதத்தினை அடைந்தது. அரசின் அதிரடியும், புலிகளின் அதிரடிப் பதிலடியுமாக யுத்தம் தொடர்ந்தமையால் பிளவுபட்ட இனத்தேசியவாதம் மென்மேலும் விரிசல் அடைந்தது.

**$SS_1 TT_1$ (2002, 2004) நோர்வே அனுசரணையுடனான ரணில் - பிரபா யுத்த நிறுத்த ஒப்பந்தம் :-**
2001 டிசம்பரில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் அம்மையாரின் P.A. கட்சி தோல்வியுற்றது. ரணில் தலைமையிலான UNP கட்சி வெற்றி பெற்றது. ரணில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கிரமசிங்க சில அனுபவங்களை 1977 இல் இருந்து பெற்றிருந்தார். புலிகளை யுத்தத்தில் வெல்ல முடியாது; இனப் பிரச்சினையைத் தீர்க்காமல் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது என்பவற்றை நன்கு உணர்ந்திருந்தார். இதனால் நோர்வே அனுசரணையுடன் எல்.ரி.ரி.ஈ தலைமையுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தினை 2002-02-23 இல் செய்து கொண்டார். வெளிநாடுகளில் விடுதலைப் புலிகளுடன் ஆறு கட்டப் பேச்சுகளையும் நடாத்தியுள்ளார். பல நம்பிக்கையைக் கட்டியெழுப்பக் கூடிய உடன்பாடுகளைக் கண்டிருந்தார். அவற்றை நிறைவேற்றும் விடயத்தில் சந்திரிக்கா அம்மையாரின் (நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி) அதிகாரங்கள் செயற்பாடுகள் தடைகளாகின. மேலும் ஜே.வி.பி யுடன் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை (UPFA) சந்திரிக்கா அம்மையார் அமைத்தார். ஜே.வி.பியின் ஊட்டல்களுக்கு ஏற்ப தனது ஆட்டங்களை ஆரம்பித்தார். ஐக்கிய தேசிய முன்னணி (UNF) அரசாங்கம் - எல்.ரி.ரி.ஈ அமைப்பு என்பவற்றுக்கிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் ஜனாதிபதியின் அதிகாரத் தலையீடுகள் காரணமாக தடங்கலாக இருந்தது. இருந்தும், நோர்வே அனுசரணையாளர்களின் விளைவாக எல்.ரி.ரி.ஈ யினர் தமது இடைக்கால நிருவாகம் பற்றிய நகலினை வழங்கியிருந்தனர். அதனையடுத்து ஜே.வி.பியின் தூண்டலின் பெயரில் ஜனாதிபதி விவேகமாக அல்லாது விட்டாலும், வேகமாகச் செயற்பட்டார். ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திடமிருந்து மூன்று முக்கிய அமைச்சுகளைப் பறித்து எடுத்தார். (பொறுப்பேற்றார்). அடுத்த பாய்ச்சலாக பாராளுமன்றத்தினைக் கலைத்து விட்டார். 2004 பாராளுமன்றத் தேர்தலில் ஐ.ம.சு முன்னணி (S.L.F.P, JVP. கூட்டணி) பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றியது. ஆனால் அறுதிப் பெரும்பான்மையாக அமையவில்லை. ஆட்சி பீடமேறிய கூட்டணி அரசாங்கக் காலத்தில் எல்.ரி.ரி.ஈ இனருக்கு எதிரான நிழல் யுத்தம் தொடர்கதையானது. இனப்பிளவு மேலும் அதிகரித்தது.

**$UU_1$(2005) - நிழல் யுத்த நெருக்கடி சுனாமிப் பொதுக்கட்டமைப்பு - ஜே.வி.பி.- பேரினவாதிகளின் எதிர்ப்பு :-**


கூட்டணி அரசாங்கத்திடமும் ஜனாதிபதியிடமும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தினைப் பேணுமாறும், சுனாமிப் பொதுக்கட்டமைப்பினை ஏற்படுத்துமாறும் நோர்வேயும் ஏனைய சர்வதேச சமூகமும் ஆலோசனைகளையும் அழுத்தங்களையும் ஏற்படுத்தின. சுனாமியால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வு - புனரமைப்பு நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா அரசு இதய சுத்தியுடன் நேர்மையாக மேற்கொள்ளாது என புலிகள் குறிப்பிட்டிருந்தனர். அதனையே இலங்கைத் தமிழரசுக் கட்சியும் வலியுறுத்தியிருந்தது. இதனை விளங்கிக் கொண்ட சர்வதேச சமூகம் அரசினையும் புலிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சுனாமிப் பொதுக்கட்டமைப்பினை உருவாக்கி அந்த அமைப்பினூடாக வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டது. அவ்வாறு ஏற்படுத்தினால் நிவாரண உதவிகளைப் போதியளவு வழங்க முடியும் எனவும் உதவி வழங்கும் நாடுகள் குறிப்பிட்டிருந்தன. அதற்கமைய சந்திரிக்கா அம்மையார் நிர்ப்பந்தத்தின் பேரில் சுனாமிப் பொதுக்கட்டமைப்பினை உருவாக்கியமை குறிப்பிடத்தக்கது. இதனால் சர்வதேச நாடுகளிடமிருந்து கோடிக்கணக்கான டொலர்களை இலங்கையரசு பெறும் வாய்ப்பினைப் பெற்றது. பொதுக் கட்டமைப்பினை வாபஸ் பெற வேண்டும் என ஜே.வி.பி, ஹெல உறுமய போன்ற பேரினவாத சக்திகள் இனவாதத்தினைக் கக்கின. எதிர்ப்பு நடவடிக்கைகளை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்தின. பயனளிக்கவில்லை. பொதுக் கட்டமைப்பிற்கான (PTOMS) ஒப்பந்தம் அரசுக்கும் புலிகளுக்குமிடையே நடந்தேறியது. ஜே.வி.பி தனது 39 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அரசாங்கத்திலிருந்து வெளியேறி எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்ந்து கொண்டது. அரசு-புலிகள் நிழல் யுத்த செயற்பாடுகள் நெடுங்கதையானது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் புலிகளுக்கெதிரான செயற்பாடுகள் அதிகரித்தது மட்டுமல்லாது அரச படைப் பாதுகாப்புடன் பயணம் செய்த புலிகளின் வாகனம் குண்டுத்தாக்குதலுக்கு உட்பட்டது. ஆனால் இழப்புகள் ஏற்படவில்லை. இந்த நிலையில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தமது செயற்பாடுகள், பயணங்களை அரசு உறுதிப்படுத்த வேண்டும் எனப் புலிகள் காலக்கெடு விதித்தனர். அக்காலக்கெடு முடிவதற்குள் திருமலையில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் சிரேஷ்ட புலி உறுப்பினர் உட்பட மூவர் கொல்லப்பட்டனர். "யுத்த நிறுத்தம்" முறிந்துவிடக்கூடிய அபாயநிலை ஏற்பட்டது. அடுத்து யாழ்ப்பாணம் கோண்டாவிலில் இராணுவச் சிப்பாயின் துப்பாக்கி வெடித்ததால் சிகை அலங்காரத் தொழிலாளி ஒருவர் கொல்லப்பட்டார். அதனை அடுத்து மக்களின் ஆர்ப்பாட்டத்திற்குள் அகப்பட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கொல்லப்பட்டார். இவ்வாறான அதிரடிப் பதிலடிகளோடு யுத்தநிறுத்தம் வலுவிழந்து செல்கின்றது. அதேவேளை பிளவுபட்ட சிங்கள - தமிழ்தேசிய வாதங்கள் மென்மேலும் விரிவடைந்து கொண்டே செல்கின்றன.



ஸ்ரீலங்காவின் கடும் போக்காளர்களான பேரினவாதிகளால் பிளவுபட்ட "தேசிய ஒற்றுமையானது" தேசியவாதம் என்ற நிலையில் இருந்து விடுபட்டு இனத்தேசிய வாதங்களாக இருதிசையில் பயணிக்கின்றன. இரு இன அரசியல் தலைவர்களுக்கிடையே காலத்துக்குக்காலம் "இனப்பிரச்சினைத்தீர்வு" தொடர்பாக மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள் - உடன்படிக்கைகள் எல்லாம் விழலுக்கு இறைத்த நீராகியுள்ளன. பேச்சுவார்த்தைகள் என்பது கால இழுத்தடிப்புகளாகவும் ஒப்பந்தங்கள் உடன்படிக்கைகள் என்பது ஏமாற்று வித்தைகளாகவும் அமைந்துள்ளன. இதனால் பிளவுபட்ட இனத்தேசியவாத இடைவெளி கூடுகின்றதே ஒழிய குறைந்தபாடு இல்லை. இதனால் மென்மேலும் இனப்பிரச்சினையும் அதனோடு இணைந்த பிளவுபட்ட இனத் தேசியவாதமும் கூர்மை அடைந்து கொண்டே செல்கின்றன. பேரினவாதிகள் சர்வதேச நிலைமைகளைப் புரியாத கிணற்றுத் தவளைகளாக உள்ளவரை, தேசிய இனப் பிரச்சினை அரசியல் வியாபாரத்திற்கான முதலீடாக இருக்கின்றவரை பிளவடைந்த இனத்தேசியவாதங்களை இணைக்கவும் முடியாது; இனப் பிரச்சினையைத் தீர்க்கவும் முடியாது. மேலும், சிங்கள மொழியையும் பௌத்த மதத்தினையும் முன்னிலைப்படுத்துவதும், நெகிழ்ச்சியற்ற தன்மையுடையதுமான அரசியல் யாப்பும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஆப்பு வைத்துள்ளன. மொத்தத்தில் பேரினவாதம், அரசியல் இலாபம், பழமையான பிற்போக்கு வாதம் குறையாதவரை பிளவுபட்ட தேசியவாதம் ஏறுவரிசையில் சென்று கொண்டே இருக்கும். முறையான பலமான சர்வதேச அழுத்தம், முற்போக்கான அரசியல் சிந்தனை என்பனவே இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரே வழியாகும்.

- முற்றும் -

**திரு.ஜி.சிறிநேசன்**
விரிவுரையாளர், மட்டக்களப்பு
தேசிய கல்விக் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்தந்தை தமிழ்நேசன் அடிகளாருடைய



மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் தமிழ்நேசன் அவர்கள் எழுதிய ***'தண்ணீருக்குள் தாகமா?'*** மற்றும் ***'வெளிச்சத்தின் வேர்கள்'*** என்ற இரண்டு நூல்களின் வெளியீட்டு விழா கடந்த யூன் மாதம் 30ம் திகதி மன்னாரில் நடைபெற்றது. மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்ற இவ்வெளியீட்டு விழாவுக்கு மன்னாார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். மன்னார் அரசாங்க அதிபர் உயர்திரு. ஏ. நீக்கிலாப்பிள்ளை, மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு. எம். ஆபேல் றெவல், மன்னார் பிரதேச செயலாளர் திருமதி ஏ. ஸ்ரான்லி டி மெல் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

இவ்விழாவுக்கு மன்னார் மடுமாதா சிறிய குருமட அதிபர் அருட்பணியாளர் பி. யேசுராஜா அடிகளார் தலைமை தாங்கினார். நூல் வெளியீட்டு உரையை அருட்பணியாளர் எஸ். அன்புராசா (அமதி) அவர்கள் நிகழ்த்தினார். முதல் பிரதியை முதன்மை விருந்தினர் மேதகு மன்னார் ஆயர் அவர்கள் நூலாசிரியரின் மூத்த சகோதரர் திரு. பி. ஆசீர்வாதம் அவர்களுக்கு வழங்கினார். நூல்களுக்கான நயப்புரைகளை மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவைத் தலைவர் திரு. ஏ. அந்தோனிமுத்து அவர்களும் மன்னார் வலயக் கல்விப் பணிமனையின் தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட் அவர்களும் நிகழ்த்தினார்கள். தொடர்ந்து முதன்மை விருந்தினரும் சிறப்பு விருந்தினர்களும் ஆசியுரைகளை வழங்கினார்கள். இறுதி நிகழ்வாக முருங்கனைச் சேர்ந்த கலாபூசணம் கலைஞர் குழந்தை அவர்களின் நாடகம் இடம்பெற்றது.

இந்நூல் வெளியீட்டு விழாவில் 600க்கும் அதிகமான மக்கள் கலந்து சிறப்பித்தனர். அண்மைக் காலத்தில் இலங்கையில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாக்களில் அதிக தொகையான மக்கள் கலந்துகொண்ட நூல் வெளியீட்டு விழாவாக இந்நிகழ்வு அமைந்திருந்ததென விழாவில் பங்கேற்ற பலரும் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

***"மன்னா"*** வெளியீடாக வெளியிடப்பட்ட இந்நூல்கள் கிறிஸ்தவ மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. ***'தண்ணீருக்குள் தாகமா?'*** என்ற நூல் இறைவனின் இனிய இயல்புகளை விவிலியக் கண்ணோட்டத்தில் வெளிக்கொணரும் நூலாக அமைந்துள்ளது. ***'வெளிச்சத்தின் வேர்கள்'*** என்ற நூல் செபம் பற்றிய புரிதல்களை விவிலிய இறையியல் பார்வையில் வழங்கும் நூலாக உள்ளது. ***'தண்ணீருக்குள் தாகமா?'*** என்ற நூலின் விலை 100.00 ரூபா. ***'வெளிச்சத்தின் வேர்கள்'*** என்ற நூலின் விலை 200.00 ரூபா. இந்நூல்களை அனைத்து மறைமாவட்ட மறைக்கல்வி நிலையங்களிலும் மற்றும் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்திற்கு முன்பாக உள்ள றண்ஸ்கா கிரீற்றிங்ஸ் கடையிலும், சென் மைக்கல் கடையிலும் பெற்றுக்கொள்ளலாம்.



நூல் வெளியீட்டு விழாவின்போது சிறப்புப் பிரதியை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களிடமிருந்து வவுனியா அமதியக மறையுரைஞர் அருட்பணி. எஸ். அன்புராசா (அ.ம.தி.) அவர்கள் பெற்றுக்கொள்கின்றார்.

# இரண்டு நூல்களின் வெளியீட்டுவிழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டும் வேண்டும் வேண்டும்

இறை புகழும் மறை புகழும்
மறந்தவர் தம் மனத்தினிடை
குறை களையக் காண வேண்டும்
வரையறைகள் கடந்தவர்கள்
குறைகளையே நீக்கிய பின்
வரையறைக்குள் வாழ வேண்டும்

கருவறைகள் கொண்டவர்கள்
கண்ணகியர் எனக் காளை(யர்)
கைதொழுது காக்க வேண்டும்
சிறையறைகள் வெறுமையெனப்
பலரறியப் பறைசாற்றிப்
பண்பினிடை வாழ வேண்டும்

வெறுவயிறும் பெரு வயிறும்
இல்லையினிப் பாரதனில்
என்றுரைத்தல் கேட்க வேண்டும்
பொறுமையலை தானாகப்
பொங்கி யெழப் பேயாக
கொடுமை தலை சாய வேண்டும்

நரை மயிர்கள் வயதறிந்து
கரு மயிர்கள் தலை சாய்ந்து
நடை பயிலக் காண வேண்டும்
குரு உரைத்தல் தானதுவே
வேதமெனக் கூரைதனில்
நின்றுரத்துக் கூவவேண்டும்

திசை மாறிப் பறந்தோரின்
திசை மாறி மனம் மாறி
திரும்பவரக் காண வேண்டும்
ஒருதேசம் ஒருலகம்
ஒருதிரம் என்றுணர்ந்தே
ஒற்றுமையைப் போற்ற வேண்டும்

சுனை பெற்ற வரம் போன்று
பிறரன்பைச் சுரக்கின்ற
மனம் பெற்று வாழ வேண்டும்
பனை பெற்ற நிழல் விட்டு
ஆல் பெற்ற வரமுற்று
அனைத்திங்கு வாழ வேண்டும்




குறை குடங்கள் விழுந்துடையக்
கண்டுணர்த்தும் நிறை குடங்கள்
நிலை தளம்பா(து) நிற்க வேண்டும்
வறுமை நிலை பொய்யாகி
வரப்புயர்தல் மெய்யாகி
வரட்சிதனை வாட்ட வேண்டும்

பரிகாசம் புரிவோர்கள்
பரிதாப நிலையுற்றுச்
சருகாகக் காண வேண்டும்
நரிமோசச் செயல்விட்டுப்
பிறர் நேசச் செயல் பெற்று
நட்பினிடை வாழ வேண்டும்

மிதுன் ஷாம் ராஜ்,
இல.36A, செல்வநாயகம் வீதி,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தீய பழக்க வழக்கங்கள் BAD HABITS

**நிகழ்வு 1.4 :-**

கணேசமூர்த்தி 44 வயதுடையவர். கடந்த சில மாதங்களாக பல்வேறு உடல்ரீதியான உபாதைகளால் பாதிக்கப்பட்டு தொடர்ந்தும் மருந்துவ ஆலோசனைகளுக்கும், சிகிச்சைக்கும் உட்படுத்தப்படுகிறார். அவரது பிரதான முறைப்பாடு நித்திரையின்மை, குமட்டல், வாந்தி போன்றவையாகும். இது பொதுவாக காலை வேளையில் ஏற்படுகின்றது. அத்தோடு கூடவே அவரது உடல்நலம் நன்றாக இல்லை என்ற முறைப்பாடு நீண்ட நாட்களாகவே கூறப்படுகின்றது. ஒருநாள் கணேசமூர்த்தி கடுமையான வயிற்றுளைவு, வயிற்று எரிச்சல் போன்ற அறிகுறிகளுடன் சிகிச்சைக் களத்திற்கு வருகை தந்தார். இதற்கு முதலும் இவர் இவ்வாறாக பல்வேறு உபாதைகளுக்கு உட்பட்டார். அதற்காக அவரிற்கு வைத்தியரால் வழங்கப்பட்ட "அல்சர்" மாத்திரைகளும் பெரிதாகப் பயனளிக்கவில்லை. இத் தடவையும் அவருக்கு கூடியளவில் "அல்சரிற்கு" எதிரான மாத்திரைகளும் பாணி மருந்தும் வழங்கப்பட்டன. மருத்துவ ஆலோசனைக்குப் பின்னர் வீடு செல்வதற்கு ஆயத்தமான கணேசமூர்த்தியை அவதானித்த வைத்தியர், அவர் மிகுந்த வியர்வை, களைப்பு என்பவற்றுடன் இருப்பதைக் கண்டு கொண்டார். வைத்தியர் அவரிடம் வேறு யாதேனும் நோயறிகுறிகள் இருக்கிறதா எனக் கேட்டார். இந் நிலையில் கணேசமூர்த்தி அழத்தொடங்கிவிட்டார். அத்தோடு தனது குடிப்பழக்கத்தைப் பற்றி வைத்தியரிடம் எடுத்துச் சொன்னார். வழமையாகவே கடந்த பலவருடங்களாக குடிக்கிற பழக்கமுள்ள நான் கடந்த சிலமாதங்களாகவே வேலைப்பழு, மனவருத்தம் போன்றன காரணமாக அளவிற்கு அதிகமாகக் குடிப்பதாகக் கூறினார். இப்போது குடிக்காமல் இருக்க முடியவில்லை. குடியே தனது நாளாந்த செயற்பாடுகளை இலகுவாக்குவதாகவும் கூறினார். சில மணித்தியாலங்களைக் கூட குடிக்காமல் கடக்க முடியவில்லை என்றும் முறையிட்டார்.

**கணேசமூர்த்தியின் பிரச்சனை தான் என்ன?**

அவர் குடிக்கு அடிமையாகி விட்டார். **(ALCOHOL DEPENDANCE)** மதுவில் உள்ள இரசாயனங்கள் குடற்புண் (அல்சர்) போன்றவற்றை ஏற்படுத்தியதோடு விக்கல் **(WITH DRWAL)** அறிகுறிகளும் காணப்படுகின்றன.

**சம்பவம் 1.5 :-**

டேவிட் 18 வயதுக் கல்லூரி மாணவன். பாடசாலையில் அவன் கல்வியுடன் மட்டும் நின்று விடாது சகலதுறைகளிலும் பிரகாசமாக ஜொலித்தான். கடுமையான உழைப்பும், விடாமுயற்சியும் அவனுடன் கூடவே பிறந்தன. அண்மைக் காலமாக "டேவிட்டில்" பல்வேறு வகையான நடத்தை மாற்றங்களைத் தாயார் அவதானித்தார். அவனது பாடசாலைப் பெறுபேறுகள் அண்மைக் காலமாக தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வந்தன. பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்லவில்லை. நண்பர்களுடன் நீண்ட நேரம் பொதுவிடங்களில் செலவிடுவது, அதிகமான பணச் செலவீனம் போன்றவை. கடந்த வாரம் தனது கைப்பையில் இருந்து பணம் களவாடப்பட்டுள்ளதையும் தாய் அவதானித்தாள். அத்தோடு அப்பணத்தை மகனே களவாடியிருக்க வேண்டும் எனவும் சந்தேகப்பட்டாள். "டேவிட்" அண்மைக் காலமாக தனது உறவினர், பழைய நண்பர்கள் ஆகியோரைவிட கூடுதலான நேரத்தை புது நண்பர்களுடனேயே செலவிட்டான். இவ்வாறான புதிய நண்பர் யார் என்பதையும் அவன் தனது பெற்றோருக்கு அறியப்படுத்தவில்லை. இந்நிலையில் தாய் தன் மகனை உளவள ஆலோசகர் ஒருவருடன் ஆலோசிப்பதற்கு கேட்டுக்கொண்ட அழைப்பையும் நிராகரித்தான். இந்நிலையில் உளநல ஆலோசகர் டேவிட்டின் வீட்டிற்கு வருவதற்குத் தீர்மானித்தார். டேவிட் அவருடன் தனது பிரச்சினைகளை முதன் முதலாகக் கதைப்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டான். நாளடைவில் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட புரிந்துணர்வு, நம்பகத்தன்மை என்பவற்றால் டேவிட் தனது பிரச்சினைகளை அவரிடம் சொல்லத் தொடங்கினான். கடந்த பல மாதங்களாக டேவிட் "கெரோயின்" என்ற போதைப்பொருளிற்கு அடிமைப்பட்டிருப்பதை அவன் கூறினான். இப் பழக்கத்தில் இருந்து விடுபடுவதற்குப் பல தடவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டேவிட் முயற்சித்தாலும் அவனால் முடியவில்லை. போதைப்பொருள் பாவிக்காதபோது மிகவும் களைப்பாகவும், ஒருவித பயங்கர அனுபவங்களும், நித்திரையின்மையும், உடல் அசதியும் காணப் படுவதால் உடனடியாக எவ்விலை கொடுத்தாவது அதனை எடுக்க வேண்டும். டேவிட் இப்பழக்கத்தில் இருந்து விடுபட முயற்சித்தாலும் அதற்குச் சரியான வழிகாட்டலையும், வழிகாட்டியையும் கண்டறிய முடியவில்லை.

### "டேவிட்டின்" பிரச்சனைதான் என்ன?

அவன் "கெரொயின்" என்னும் போதைப் பொருளிற்கு அடிமைப்பட்டுள்ளான். இதனால் அவனது ஒளிமயமான எதிர்காலம் கருகிப் போனதோடு, பாடசாலைக் கல்வியையும் இழந்து, போதைப் பொருளிற்கு அடிமைப்பட்டுள்ள புதிய நண்பர்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ளான். போதை வஸ்து வாங்குவதற்கு திருடும் பழக்கமும், பொய் சொல்வதும் அவனிடம் காணப்படுகின்றது.

மது, புகை போதைவஸ்து என்பவற்றிற்கு அடிமைப்பட்டவர்களின் உடல்நலத்துடன் கூடவே உளநலமும் பாதிக்கப்பட்டுவிடும். இவ்வாறாக மது, போதைவஸ்து என்பவற்றுக்கு பழக்கப்பட்டவர்கள் அவை இல்லாதபோது உடல், உள உபாதைக்கு உட்படுவதால் அவர்களது வாழ்க்கை அவற்றை மையப்படுத்தியே அமையும். அதுவும் அவர்களது குருதியில் அவற்றின் அளவு குறையும்போது ஏற்படும் "ஒதுங்கல்" அறிகுறிகளை (WITHDWAL SYMPTOMS) மீண்டும், மீண்டும் அவற்றினை பாவிப்பதன் மூலமே குறைத்துக் கொள்ள முடியும். இங்கு இவற்றிற்கு அடிமைப்பட்டவர்கள் அன்றி அவர்களது குடும்பம், அவர்கள் சார்ந்த சமூகம் என இதுவொரு தொற்று நோயாக, ஆட்கொல்லியாக ஆளைப்பாதித்து நிற்கும். அத்தோடு கொலை, களவு, கற்பழிப்பு, வன் முறைகள் என்பன இதன் பிரதிபலிப்பாக உருவெ டுத்துத் தாண்டவமாடலாம். இலங்கையில் நடை பெறுகின்ற பல்வேறு சமூக விரோதச் செயல்களின் பின்னணியில் இவ்வாறான மது, போதைப்பொருள் பாவிப்பவர்கள் இருப்பது உள்ளங்கை நெல்லிக் கனிக்கு ஒப்பான ஒருவிடயமே.

இலங்கையில் மதுவகைகள் பொதுவாக அரசாங்க அனுமதியுடன் விற்கப்படுகின்றன. இதில் உள்நாட்டு, வெளிநாட்டு சகல வகைகளும் சாதா ரண மூலை முடுக்கில் கூட காணப்படுகின்றன. தவிர "கசிப்பு" எனப்படுகின்ற உள்ளூர் உற்பத்தி தாராளமாக சட்டத்தின் கண்ணிற்கு மண்தூவி விற்பனைச் சந்தையில் கிடைக்கிறது. "கள்ளு" பொதுவாக பன்நெடுங்காலமாகப் பாவிக்கப்படு கின்றது. போதைப்பொருளும் புதிதாக அறிகின்ற ஒரு பொருளல்ல. இலங்கையைப் பொறுத்தவரை "கஞ்சா" வீட்டுத்தோட்டமாகக் கூட செய்கின்ற அளவில் உற்பத்தியாகியுள்ளது. அத்துடன் வெளி நாட்டு இறக்குமதியான "கெரோயின்", "கொக் கேயின்", "எல்.எஸ்.டி (L.S.D) என்பவை கள்ளச் சந்தையில் காணப்படுகின்றன.

இலங்கைத்தீவு, உல்லாசப் பிரியர்களுக்கு சொர்க்க புரியாக பல்வேறு வகையில் உதவுவதில் போதை பொருள் வாய்ப்பும் சேர்ந்தேயுள்ளது. இவற் றோடு ஆண்கள் முதல் பெண்கள் வரை வெற்றிலை போடுதல், தூக்க மாத்திரைகள், வலி நிவாரணி களைப் பாவித்தல் என்பன பொதுவான விடயங் களே.

இப்பழக்கங்களில் இருந்து விடுபடுகின்ற வழிமுறைகளையும், ஆலோசனைகளையும் பின்னர் ஆராய்வோம்.

### மதுபாவனைக்கு அடிமைப்பட்டவர்களில் காணப்படும் அறிகுறிகள்

இப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டவர்களில் உடல், உள ரீதியான அறிகுறிகள் காணப்படலாம். இவை ஒன்றாகவோ பலவாகவோ அமைய முடியும்.

### உடலியல் அறிகுறிகள் (PHYSICAL SYMPTOMS)

I. இரைப்பை கோளாறுகள், இரைப்பை அழற்சி (Gastritis), இரைப்பை புண்கள் (Ulcers)
II ஈரல் சம்பந்தமான நோய்கள்
III இரத்த வாந்தி
IV காலையில் வாந்தி வருவது போன்ற உணர்வு (ஓங்காளம்)
V கை நடுக்கம் (பொதுவாகக் காலையில்)
VI விபத்துகளும், காயங்களும்
VII வலிப்பு
VIII அதிகவியர்வை, மாறாட்டமான கதை

### உணர்வு ரீதியான காரணிகள் (Feeling)

I ஆதரவு இல்லை என்ற உணர்வு
II குற்ற உணர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III தாழ்வு மனப்பான்மை

**சிந்தனை ரீதியான காரணிகள் (Thinking)**

I எப்போதும் குடிக்க வேண்டும் என்ற ஆவல், ஆசை

II அடுத்ததடவை குடிக்க வேண்டுமென்ற எண்ணங்களும், தேடல்களும்

III தற்கொலை எண்ணங்கள்

**நடத்தை ரீதியான காரணிகள் (Behaving)**

I நித்திரைக் கோளாறுகள்

II பகல் வேளையில் குடிப்பது (நாள்முழுவதும்)

III காலையில் எழுந்தவுடன் குடிப்பது (Eye Openers)

**போதைவஸ்துவிற்கு அடிமைப்பட்டவர்களில் காணப்படும் அறிகுறிகள்**

இங்கும் கீழ்வரும் அறிகுறிகளில் ஒன்றோ பலவோ காணப்படலாம்.

**உடலியல் அறிகுறிகள் (Physical Symptoms)**

- சுவாசச் சிக்கல்
- போதைப்பொருள் ஏற்றப்பயன்படுத்தும் ஊசியினால் உடலில் சிதழ்கட்டிகள், நோய்த்தொற்றுக்கள் காணப்படலாம்.
- போதைப்பொருள் எடுக்காத இடைவெளியில் விலகல் நடத்தைகள் அதாவது குமட்டல், பயம், பதற்றம், நடுக்கம், வயிற்றோட்டம், வயிற்று முறுகல், அதிகவியர்வை என்பன காணப்படும்.

**உணர்வு ரீதியான (Feeling)**

- கைவிடப்பட்ட அல்லது தனித்துவிடப்பட்ட என்ற உணர்வு
- குற்றவுணர்வு
- கவலை, மனச்சோர்வு.


**சிந்தனை ரீதியான (Thinking)**

- போதைப்பொருள் எடுக்க வேண்டுமென்ற ஆவல்.
- அடுத்த தடவை எடுக்க வேண்டும் என்ற எண்ணம், சிந்தனை, கவலை.
- தற்கொலை எண்ணங்கள்.

**நடத்தை ரீதியானது (Behaving)**

- நித்திரைக் கோளாறுகள்
- சீறி சினத்தல், எளிதில் கோபப்படுதல்.
- களவு, பொய் எப்போதும் வன்முறைக் குணம்.
- அடிக்கடி சிறைக்கும், மனநல மருத்துவமனைக்கும் சென்று மீளுதல்.

(தொடரும்....)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு
மட்டும்

முடிவுத்திகதி
30 - 08 - 2007




# விவிலியம் கற்போம் - 59

(விடுதலைப் பயணம் 39:1-43)

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

நீலம் கருஞ்சிவப்பு சிவப்பு நிறத்துகிலால் நெய்த மெல்லிய ஆடைகள் தூயதலத் திருப்பணிக்காகச் செய்யப்பட்டன. ஆண்டவர், மோசேக்கு அளித்த கட்டளைப்படி .................................... திருவுடைகள் செய்யப்பட்டன. பொன்னையும், நீலம், கருஞ்சிவப்பு, சிவப்பு நிற நூலையும் முறுக் கேற்றி செய்த மெல்லிய நார்ப்பட்டையும் பயன்படுத்தி .................................... அவர் செய்தார். ஏப்போதுக்கு இருதோள்பட்டைகள் செய்து இரு பக்கத்து ஓரங்களிலும் இணைத்தார். ஆண்டவர் மோசேக்கு கட்டளையிட்டபடியே தயாரிக்கப்பெற்றது. பன்னிற ............................ மெருகேற்றி அவற்றைப் பொன்னிழைப் பின்புலத்தில் பதித்தனர். மார்புப்பட்டை, ஏப்போது போலவே கலைவேலைப்பாட்டுடன் செய்யப்பட்டது. அது பொன்னாலும், நீலம் கருஞ்சிவப்பு சிவப்பு நிற ......................., முறுக்கேற்றி நெய்த மெல்லிய நார்ப்பட்டாலும் செய்யப்பட்டிருந்தது. மார்புப்பட்டைமேல் பொருத்துவதற்காகப் பின்னல் வேலைப்பாட்டுடன் அமைந்த சங்கிலிகளைப் பசும்பொன்னால் செய்தனர். பொன் பதக்கங்கள் இரண்டும் .............................. வளையங்கள் இரண்டும் செய்தனர். அவர் ஏப்போதின் அங்கி முழுவதையும் நீலநிறத்தில் நெசவு வேலைப்பாட்டுடன் செய்தார். பசும்பொன்னால் மணிகள் செய்து அம்மணிகளை அங்கியின் விளிம்பெங்கும் உள்ள .......................... தொங்கல்களுக்கு இடையே இட்டனர். ஆரோனுக்காகவும் அவர் புதல்வருக்காகவும் மெல்லிய நார்ப்பட்டால் உள்ளங்கி தைக்கப்பட்டது. மெல்லிய நார்ப்பட்டால் தலைப்பாகையும் தொப்பிகளும், முறுக்கேற்றி நெய்த மெல்லிய நார்ப்பட்டால் ......................... செய்யப்பட்டன. பின்னல் வேலைப்பாட்டுடன் இடைக்கச்சை செய்யப்பட்டது. புனித மணிமுடிக்கான பட்டத்தைப் பசும் பொன்னால் செய்து அதன்மேல் "ஆண்டவருக்கு அர்ப்பணம்" என்று முத்திரைபோல் ............................ வைத்தனர். சந்திப்புக்கூடாரத்தின் திரு உறைவிட வேலையெல்லாம் முடிவடைந்தது. மோசேயிடம் கொண்டு வரப்பட்டவை; ............................... அதன் துணைக்கலன்கள் கொக்கிகள், சட்டங்கள், குறுக்குச் சட்டங்கள், தூண்கள், பாதப் பொருத்துகள், செந்நிறமாகப் பதனிட்ட செம்மறிக்கிடாய்த் தோல்விரிப்புகள், வெள்ளாட்டுத் தோல் விரிப்புகள், திருத்தூயகத் தொங்குதிரை, ............................... அதன் தண்டுகள், இரக்கத்தின் இருக்கை, மேசை, அதன் அனைத்துத் துணைக்கலன்கள், திருமுன்னிலை அப்பம், பசும் பொன் விளக்குத்தண்டு.. ஆகியவை, ஆண்டவர் கட்டளையிட்டிருந்தபடியே யாவும் செய்யப்பட்டிருந்தன. மோசே அவர்களுக்கு ஆசி வழங்கியுள்ளார்.

**விடைகள் :-** குறுங்கால் சட்டைகளும், மாதுளை, உடன்படிக்கைப்பேழை, ஆரோனுக்காக, திரு உறைவிடக்கூடாரம், ஏப்போதை, மணிக்கற்களுக்கு, பொன், பொறித்து, நூலாலும்.

*(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம் - 59

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக் கோடிடுக)

01) இலங்கையின் தேர்தல் மாவட்டங்களின் எண்ணிக்கை
(25, 22, 26)

02) 1658-1796 ஆகிய காலப்பகுதியில் இலங்கையை ஆண்டவர்கள்.
(போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்)

03) இலங்கை அரசின் நிர்வாக ரீதியான அறிவித்தல், பிரகடனங்களைத் தாங்கி வரும் அதிகார பூர்வமான ஏடு
(வர்த்தமானி, தினகரன், ஹன்சார்ட் அறிக்கை)

04) இலங்கையில் லயன்ஸ்கழகம் ஆரம்பிக்கப்பட்டு எத்தனை வருடங்கள் ஆகின்றன?
(40, 50, 60)

05) ஏழுமலைகளின் நகரம் எனப்படுவது
(ரோம், திருகோணமலை, இமயம்)

06) ஆசிய உதைப்பந்தாட்டப் போட்டிகளில் பங்கு கொண்ட, ஆசிய நாட்டைச் சேராத நாடு எது?
(அவுஸ்திரேலியா, ஜப்பான், கொரியா)

பெயர் : ................................................................

முகவரி : ................................................................

................................................................

**அனுப்பவேண்டிய முகவரி:**
**விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 59**
**தொண்டன்**
**அ.பெ. எண் - 44**
**மட்டக்களப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## விவிலியம் கற்போம் - 57 விடைகள்

வேய்ந்தார், நான்கு, இரக்கத்தின், இரண்டு தண்டுகள், தட்டுக்கள், ஆறுகிளைகள், ஒருமுழமும், தண்டுகளை, திருப்பொழிவு.

## அறிவை வளர்ப்போம் - 57 விடைகள்

1. சொலபரிபிரபு
2 ஹிர்தோளம்
3. விபரீத அணி
4. மனிங்தேசாதிபதி
5. ஏரைத்தேடு
6. அலிபாபாவும் நாற்பது திருடர்களும்

**இருபிரிவுகளுக்கும் சரியான விடை அளித்தவர் எவரும் இல்லை**

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை எழுதி**
**ரூபா 100/= பரிசு பெறுவோர்**

- அந்தோனிமுத்து தயோதினி
  தேவகிராமம்,
  அலிகம்பை.
- பி. யேசுதாஸ்
  இல. 08 (T.R.O) திருச்செந்தூர் பகுதி,
  சுவிஸ் தமிழ் கிராமம், திராய்மடு.
- ஜோன் கெனடி மேரிநிஷாந்தினி
  இல- 40/1 1ம் ஒழுங்கை,
  புளியங்குளம், திருகோணமலை.

**பாராட்டுப் பெறுவோர்**

- ர. ரோய் ஜக்சன்
  358/1 வீரநகர், N.C. வீதி
  திருகோணமலை
- மெமோரின் வாத்லட்
  29 வீட்டுத்திட்டம்
  பாண்டிருப்பு - 2, கல்முனை.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி முடிவுகள் - 9**

- **முதலாம் பரிசு** - 300/=
  ஜ. மரினோ யூக்கறிஸ்ரன்
  11/3, 7ம் குறுக்கு
  கல்லடி, டச்பார்,
  மட்டக்களப்பு.
- **இரண்டாம் பரிசு** - 200/=
  கிரேம் ராஜ்தினேசா
  சின்னமுகத்துவாரம்
  அக்கரைப்பற்று - 09
- **3ம் பரிசு** - 100/=
  தி. செரின்
  93/2 9ம் ஒழுங்கை
  நீதிமண்ற வீதி
  திருகோணமலை

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registeredas a News Paper in Sri Lanka.

# காற்றில் கலந்துவரும்.....

## இலங்கை வானொலி தேசிய சேவையில்
## கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்
## ஆகஸ்ட் - 2007

### கத்தோலிக்க நற்சிந்தனை – நேரம் காலை 6.10 மணி

| | | | |
|---|---|---|---|
| நாள் :- | 04, 05, 06, 07 | - | திரு. பெஸ்லியோ வாஸ் |
| | 08, 09, 10 | - | திருமதி. செபஸ்ரியாம்பிள்ளை |
| | 18, 19, 20, 21 | - | அருள்தந்தை. பிரைனர் செலர் |
| | 22, 23, 24 | - | திரு. ஆனந்தா A.G. இராஜேந்திரம் |

### புதிய உலகம் – நேரம் மாலை 6.30 மணி

நாள் :- 12, 26

நாடகம், சித்திரம், சிந்தனை உரை, பாடல்கள் மற்றும் பல்சுவை அம்சங்கள்

### சிறுவர் உலகம் – நேரம் மாலை 6.45 மணி

நாள் :- 14, 28

கதையும், கருத்தும், குறுநாடகம், உருவகக் கதை, கவிதை,

பாலர் பாடல்கள், இன்னும்...

நிகழ்ச்சித் தொகுப்பு : மலர்வேந்தன்

தொடர்பு. சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

Wanasinghe Printers, 126/1, Trinco Road , Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org